# திராவிடநாடு

12—8—62 | வார வெளியீடு | விலை 16 காசு


## "காந்தியம் அழித்துவிட்டாய்!"


○ —[ ப. வரதராசன் ]— ○


மாண்ட முடியரசின்
மறவழி நடந்துநின்று
காந்திவழி தவறிவிட்டாய்
கதருடையைத் தாழ்த்திவிட்டாய்
(மாண்ட)

காந்திவழி சென்றஎங்கள்
கடமைமிகு அண்ணன்தம்பி
கரங்களை முறித்துவிட்டாய்
காந்தியம் அழித்துவிட்டாய்
(மாண்ட)

சுதந்திரப் பண்பாடி
சுற்றிய கிளிபலதை
கூண்டில் அடைத்துவிட்டாய்
கொள்ளியால் சுட்டுவிட்டாய்
(மாண்ட)

அடித்து உடல்கிழித்து
அதில்வரும் குருதிதனை
எடுத்துக் குடித்துவிட்டாய்
எம்உணர்வைத் தூண்டிவிட்டாய்
(மாண்ட)

பாய்புலியை எழுப்பிவிட்டு
பல்லவியை பாடிக்கொண்டு
நிற்கிறாய் நிலைதடுமாறி
நினைத்தாயா முடிவதையே
(மாண்ட)

# பால்நிலவை உடுத்திய பாவை

ந. இறைவன், பி.ஏ.

கேட்டாயோ தோழி.

சொன்னால்தானே கேட்பதற்கு.

எப்படியடி சொல்வேன்.

எப்படி எப்படி நடந்ததோ! அப்படி அப்படியே சொல்லுங்கள் தலைவி!

நாணமாக இருக்கேடி!

என்னிடம் சொல்லக்கூடவா தலைவி உங்களுக்கு நாணம்? நாணத்தைவிட்டு நடந்ததைச்சொல்லுங்கள். எவ்வளவு நாளாய் ஆவலோடு காத்திருக்கிறேன் தெரியுமா?

எதற்கடி காத்திருந்தாய்?

பூத்திருக்கும் நம தலைவி புதுக் கதைகள் சொல்லவருவாள் என்று தான் காத்திருந்தேன்.

எனக்குமட்டும் என்னவாம் தோழி! உன்னிடம் அதைச்சொல்லிச்சொல்லிச் சிரிக்கவேண்டுமென்பதற்காகத்தானே இந்த நேரத்தில் ஓடோடி வந்தேன்!

அதென்ன தலைவி இந்த நேரம்...!

போடி தெரியாதவள்போல் நடிக்கிறாயே! பூவுடைச் சோலையெல்லாம் பாவுடைத் தலைவனைப் பார்த்திருக்கும் நேரமில்லையா இது!

அதுமட்டுமா தலைவி. அந்தப்பாவுடைத் தலைவன்; காவிடை நின்று கோடு இடைக் கோதையுந்தன் குழலதனைக் கோதி நிற்கும் நேரமல்லவா?

குறும்புக்காரியாச்சே! ஒன்று சொன்னால் ஒன்பது அடுக்குகிறாயே!

நானா தலைவி, ஒன்று சொன்னால் ஒன்பது அடுக்குகிறேன். நீங்களல்லவா ஒன்றைக் காட்டி ஒன்பதை மறைக்கிறீர்கள். ஒளிவு மறைவு இன்றி உள்ளதை உள்ளபடி சொல்லுங்கள் தலைவி!

அப்படித் தனியிடம் போவாம் வா தோழி!

ஏன் இங்கு என்ன தலைவி? இதுவும் தனியிடம்தானே!

பூவில்லாச் செடிகொடிகள் உள்ள இடம் போவோம் வா. பூத்திருக்கும் பூக்கள் நாம் கதை சொல்லக் கேட்டிருந்தால் அவை என்னைப்பார்த்து கேலியாகச் சிரிப்பதாக எனக்குத் தோன்றும். அதனால்தான் பூவில்லா இடம் நோக்கிப் போவோம் வா என்றேன்.

சரி சரி வாருங்கள். நல்ல வெட்கம் உங்களுக்கு! இங்கேயே உட்காரலாமா? இந்தச் செடிகளில் பூவுமில்லை ஒன்றுமில்லை! காலத்தைக் கடத்தாமல் கதையினைச் சொல்லுங்கள்.

சொல்லவா தோழி!

சொல்லுங்கள் தலைவி!

மன்னரடி அவர்!

எதிலம்மா மன்னர்! தெருக்கோடிக்கா திண்ணைக்கா மன்னர்.

கன்னம் பழுக்க உன்னை அறைவேன்தெரியுமா? அவரைப் பார்த்தா தெருக்கோடிக்கும் திண்ணைக்கும் மன்னர் என்று சொல்லத் துணிந்தாய்!

எனக்கென்னம்மா தெரியும்; எதிலே அவர் மன்னரென்று! சந்தேகம் கேட்டேன்! தெருக்கோடிக்கா திண்ணைக்கா என்று!

சரி சரி! இனியாவது நான் சொல்லும்போது காதைமட்டும் திறந்துவை. அன்றைக்கு மாந்தோப்புக்குச் சென்றேனே! அடி மண்டு அதுதான் உனக்குச் சொன்னேனே! பூங்காவில் காத்திருப்பாரென்று அவசர அவசரமாக ஓடினேனே அன்று...இப்பொழுதுதான் நினைவு வந்ததோ? கள்ளி...நான் முழுதும் சொல்லவேண்டும் என்பதற்காகவே நீ மறந்தவள்போல் நடிக்கிறாயா?

சொல்லுங்கள் தலைவி!

என்னடி என்னமோ குழந்தை போல் கொஞ்சுகிறாயே?

கொஞ்சவில்லை தலைவி. கொஞ்சிப் பழகுகிறேன், நீ பெற்றெடுக்கப் போகும் குறும்பு மழலையைக் கொஞ்சி மகிழ்விக்க.

அன்று நான் நேரம் கடந்து சென்றேனா! அவர் காத்திருந்து காத்திருந்து களைப்புற்றுக் கிடந்தாரா! வலியெடுக்கும் என் மெல்லடியெடுத்து மெள்ள மெள்ள நடந்து சென்றேனா?

அள்ளி அணைத்திருப்பார் அழகு தளிரென்று! இல்லையா தலைவி!

போடி போக்கிரி! அள்ளுவதும் அணைப்பதும் விட்டால் அகத் தொழில் வேறு இல்லவே இல்லையா? பொறுமையாக் கேளேன்.

சரி சரி சொல்லுங்கள். இதிலே பொறுமை காட்டவா முடியும்?

நீ எதிலேதாண்டி பொறுமை! இதிலே பொறுமை காட்ட? காலம் கடந்துதான் சென்றேன். அவர் கண்களில் ஏக்கத்தின் தேக்கமும் இருக்கத்தான் கண்டேன். அவர் தான் மன்னராயிற்றே கோபிப்பாரா! கோபத்தை இம்மியும் காட்டினாரில்லை.

என்னவராக இருந்திருந்தால் ஏன் இன்னேரம் என்று எரிந்து பொரிந்திருப்பார்.

உன்னவராடி என்னவர். நான் சென்றவுடன், கோதை எனக்கவர்; கொத்தான கொடிமுல்லைதனை எடுத்துச் சூடிக்கொள் எனக் கொடுத்தார்.

தித்திக்கும் என் வாய் திறந்து, மனம் வருந்தி மலர்முகம் வாடி, அத்தான் இவையேன் வாடிற்று எனக் கேட்டேன்.

அது என்ன தலைவி! தித்திக்கும் வாய்!

போடி! அவர் சொல்லுவார் அப்படி! நானா கண்டேன். என் வாய் தித்திக்குமோ? திகட்டுமோ? உவர்க்குமோ? கசக்குமோ? அவர் சொல்லுவார் அடிக்கடி தித்திக்கும் வாயென்று! அந்தப் பழக்கத்தில் சொல்லிவிட்டேன்.

போகட்டும். ஏன் வாடிற்று எனக் கேட்டதற்கு என்ன தலைவி சொன்னார் அவர்.

எனை வைத்து ஒரு புது இலக்கியமே படைத்தாரடி.

என்னம்மா அவர் படைத்த புதுமை இலக்கியம். சொல்லம்மா சொல் வரிசை மாற்றமின்றி.

அவர் சொன்னதைச் சொல்கின்றேன் கேள். "ஆடும் கொடியின் அழகினைக் கெடுத்து ஏன் பறித்தாய் எனை என்று கேட்டதாம் முல்லை. அதற்கு அவர், ஆடும்

(4ம் பக்கம் பார்க்க)

# மன்றம் தீர்ப்புக்கூறும்

மலர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (12—8—62) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 50

விலைவாசிகள் விடம்போல் ஏறுகின்றன! அவற்றைத் தடுப்பதற்கு முன் வாருங்கள் என்றோம்!

விலைவாசிகள் ஏறத்தான் செய்யும். அவற்றைத் தடுப்பதற்குச் சம்மதிக்க மாட்டோம் என்று ஆணவத்தோடு பதில் கூறினர் கோலோச்ச வந்தவர்கள்.

ஏழையை வாட்டி வதைக்காதீர்! ஏழையின் வயிற்றில் அடிக்காதீர்! கால் வயிற்றுக் கஞ்சிக்கே கடுந் துன்பம் படுபவர்க்கு மேலும் இந்த விலைவாசி ஏற்றத்தால் மிகத் துன்பம் இழைக்காதீர்!

மாற்றிக்கொள்வீர் முடிவை!

மறு பரிசீலனை செய்வீர் அதனை!

மக்களின் வாக்குகள் பெற்றுத்தான் மன்றம் ஏறி வந்துள்ளீர். வாக்களித்த மக்களுக்கு நல்லது செய்ய வழி இல்லை என்றாலும், அல்லது செய்ய முனையாதீர்! இது அடுக்காது! மக்களின் கண்ணீர் கூரிய வாளினும் கூர்மையுடையது! வலிமையுடையது! சிந்திப்பீர்! விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க முன்வருவீர் என்றோம்.

முடியாது போ, போ! நீ சொல்வதாவது நாங்கள் கேட்பதாவது! விலைவாசிகள் உயரவில்லை! அப்படியே உயர்ந்திருந்தாலும் மக்களுக்கு அது ஒரு பொருட்டாக இல்லை. அப்படியே அதனை மக்கள் பொருட்படுத்தினாலும், அந்த விலைவாசி ஏற்றம் மக்களால் தாங்கமுடியாதது அல்ல! மக்களின் வருமானம் பெருகியிருக்கிறது, அந்த வருமானப் பெருக்கத்தால் விலைவாசி ஏற்றத்தை மக்கள் தாங்கிக்கொள்ள முடியும் என்று ஆளுகையிற் கொலுவிருப்பதால் பெருகிவிட்ட அதிகார போதை மூட்டிவிட, சொல்வது யாது என்று உணராத நிலையில், ஏழையர் சார்பில் நாம் விடுத்த கோரிக்கையை எட்டி உதைத்துவிட்டு இறுமாந்து நின்றது காங்கிரஸ் அரசு.

இது அடாது! மக்களாட்சிப் பண்புக்கு ஒவ்வாது! தகாது! விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க வழி காணத்தான் வேண்டும்! இது மக்கள் சார்பில் மன்றமேறியுள்ளோரின் பொறுப்பு என்றோம்! கடமை என்றோம்!

பொறுப்பாவது, கடமையாவது! உம் வார்த்தை எமக்கு வெறுப்பைத்தான் தருகின்றது! விலைவாசி ஏற்றத்தால் விபரீதம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை! அதனால் ஊறுமில்லை! அதிலே சிக்கலுமில்லை! தடுப்பதற்கு அங்கே ஒன்றுமில்லை! உம் யோசனையை நாங்கள் ஏற்கப் போவதுமில்லை! என்று கூறிற்று அரசு. விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க வழி காணுங்கள்! நாங்கள் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், நீங்களாவது முறை வகுத்து ஏறுகின்ற விலைவாசி எனும் விடத்தைத் தடுக்க முன்வாருங்கள் என்று மறுபடியும் வேண்டுகோள் விடுத்தோம்! முடியாது முடியாது என்று பழைய பதிலே வந்தது!

விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க முன்வரவில்லை என்றால், அறவழி மறியல் புரிவோம்! காந்திய நெறியில் நின்று போராட்டம் நடத்துவோம் என்றோம்!

நடத்திக்கொள்! எங்களிடம் போலீசு இருக்கிறது! போலீசிடம் குண்டாந்தடியிருக்கிறது! எங்களிடம் சிறையிருக்கிறது—என்றார்கள்.

உடனே அறவழி மறியலைத் துவங்கிவிடவில்லை நாம்! தேதியை ஒத்தி வைத்தோம்! குறைந்தபட்ச கோரிக்கையாக அனைத்துக் கட்சிகளையும் அழைத்து விலைவாசி ஏற்றம்பற்றி, அதனைத் தடுப்பது குறித்து ஆலோசனை நடத்துங்கள் என்றோம்! மன்றமேறிக் கேட்டோம்!

மன்றத்தின் பெரும்பான்மை நம் குரலைச் சிறுமைப் படுத்திற்று!

> ஏழையின் கண்ணீரைத் துடைப்பதற்கென, வாட்டத்தை ஓட்டுவதற்கென, துன்பத்தைப் போக்குவதற்கென மன்றிலே நாம் சென்ற வழிகள் எல்லாம்;—மன்றிலே உள்ள வழிகள் எல்லாம் பெரும்பான்மையெனும் கதவால் மூடப்பட்டிருந்தன; தடுக்கப்பட்டிருந்தன!

எனவே, மன்றத்துக்கெல்லாம் உயர்மன்றமான மக்கள் மன்றமே புகல் என வந்தடைந்தோம்! அந்த மக்களின் மாமன்றத்துக்கு முன்னர், அந்த மக்களின் துயர் துடைப்பதற்கென யாம் விடுத்தவேண்டுகோளைத் திரும்பவும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரும் வகையில் அறவழி மறியலில் ஈடுபட்டோம்! காந்திய நெறிபிறழாத அறப்போராட்டத்தினை மேற்கொண்டோம்!

நாட்டு மக்கள் வாட்டம் போக்கிட நாம் கோரிக்கை விடுத்தோம்! அறவழி மறியல் புரிந்தோம்! எம் கோரிக்கை நேர்மையற்றது என்று நியாய உணர்வுள்ளோர் சொல்ல முன் வருவார்களா? கழகத்தையே இத்தோடு அழித்தொழித்துவிடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு காங்கிரசு அரசு நடத்திக்காட்டிய, நடத்திக் காட்டிக்கொண்டிருக்கின்ற கொடிய செயல்கள் அற்ப சொற்பமானவை என்று மனச்சான்றுள்ளோர் சொல்ல முன்வருவார்களா?

கழக ஏடுகளே வேண்டாம். நடுநிலை ஏடுகள் வெளியிட்ட அடக்குமுறை நிகழ்ச்சிகளைப் படித்தறிந்தோர் இந்த ஆட்சி மக்களாட்சிப் பண்போடு நடந்து கொண்டது என்று சொல்லத் துணிவரா?

இதோ நடுநிலை நாளேடுகளில் வெளிவந்த சில செய்திகள்—கருத்துக்கள்:

"குற்றம் செய்தவர்கள்போலக் காணப்படும் எவரையும் கைது செய்துவிடவேண்டும் என்பதிற் பொருள் இல்லை. வாழ்க்கை வசதியின்றி நடைபாதைகளிலும், குடிசைகளிலும் வாழ்பவர்களைக் கைது செய்வதிற் பொருளில்லை. இப்படிக் கைது செய்வது தவறு. போலீசார் நியாயமான முறையில் நடந்து கொள்ளவேண்டும்"

"காந்தியடிகள் ஒழுங்காக நடத்திய ஆரவாரங்கள் சில நேரங்களில் வன் முறையில் திரும்பிப் போலீசு அடக்குமுறைக்கு உள்ளாகவேண்டி வருவதுண்டு. ஆனால்,

"பஞ்சாப் கலவரங்களின்போது பிரிட்டிசார் நடந்துகொண்ட காட்டுமிராண்டித்தன்மையைவிடப் **படுமோசமான காட்டுமிராண்டி முறைகளைத் தமிழக அரசு கையாண்டு வருகிறது"**

"முதல் நாளில் மட்டுமின்றி இரண்டாவது மூன்றாவது நாட்களிலும் (கழகத்தவர்) கைது செய்யப்பட்டிருக்கின்றனர்"

"தி. மு. கழகம் மறியல் போராட்டம் நடத்தியதில் எந்தவிதத் தவறுமில்லை. வேண்டும் என்றேதான் தி. மு. கழகத் தலைவர்களைச் சிறையில் அடைத்திருக்கிறார்கள்"

"முன்னர் இத்தகு கொடுமைகளை மக்கள் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். இப்போது கொடுமைகள் நடப்பது மட்டுமின்றி அதை மக்கள் பொறுத்துக் கொள்ளவும் செய்கின்றனர். அடிமை மனப்பான்மை குறித்துக் காந்தியடிகள் கண்டித்தார். ஆனால் வெள்ளையர் காலத்தில் இருந்ததைவிட அதிக அளவில் இன்று அடிமை மனப்பான்மை இருப்பதைக் காண்கிறோம்."

இந்தக் கருத்துக்களையும் செய்திகளையும் மக்கள் ஓர்ந்து பார்க்கட்டும்! மாற்றார் கூறும் செய்திகளோடு ஒத்திட்டுப்பார்க்கட்டும்!

இனித் தீர்ப்புக் கூறவேண்டியது மக்கள் மன்றமே தான்! மகேசனின் தீர்ப்பையும் மாற்றியமைக்கும் வல்லமை பொருந்திய மக்கள் மன்றமேதான்! இன்றைய தமிழக அரசின் அடக்குமுறையினை ஓர்ந்து பார்க்கட்டும் மக்களின் மாமன்றம்! தீர்ப்புக் கூறட்டும்!

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொடியின் அழகென்ன அழகு. உனைச் சூடும் கொடியின் அழகன்றோ அழகு எனச் சொல்லி என் வருகைக்காக நிலவில் நெடும் பொழுது காத்திருந்தாராம்.

ஆடும் கொடியசைவினையே அழகுடைத்து எனச் சொன்னால்; எனைச் சூடும் கொடியவள் ஊடி நடை நடந்தால் பாடும் இடை ஆடுமே அதனை என்னென்பது! அழகென்பதா! அழகின் மேலென்பதா! எனவும் சொன்னாராம் அந்த முல்லைக்கு!

இதைக் கேட்டு, எனைச் சூடும் கொடியவள் எங்கே எங்கே எனக் கேட்டு முல்லை என்னை நாடியதாம். நாடி ஓடியதாம். ஓடித் தேடியதாம். தேடித் தேடி ஊடியதாம். ஊடி வாடியதாம்.

ஊடி வாடிய மலரின் ஊடலையும் வாடலையும் நீக்குதற்கே நீ வந்தாய். கூடல் நிகழ்த்துவாய். கொடிமுல்லை சூடுவாய் எனச் சொன்னார்.

மலர்தந்தேன் சூடெனச் சொல்லி; நீயோ வாடியமலரேன் எனக்கெனச் சொல்லி ஊடுகிறாய். கூடல் இன்பந் தனை மறந்தனையோ? கூடல் இன்பந் தனை நினைந்துவிடு! பின் ஊடலையே மறந்திடுவாய். வா நீ. வந்து சூடுவாய் மலரினை. சூடிப் பாடுவாய் குயிலென நீ. பாடி ஆடுவாய் மயிலென நீ. ஆடி ஓடுவாய் மானென நீ! நான் நாடுவேன் உனை தேனின் மேலென எண்ணி என்றாரவர்.

பாடலின் தலைவி என்றாரவர் என்னை. பா பாடும் கவிஞன் என்றேன் நான் அவரை.

இன்னும் என்னென்ன செய்தாரோ தலைவி! குறும்பு வளர் பிறையோ தேய்பிறையோ?

காதலர் இருவரிடை குறும்பு என்றுமே முழு நிலவானதில்லை! அது என்றுமே வளரும் பிறையடி வளரும் பிறை.

மலர் சூடி நடந்தேன். பின்னிருந்து என் பின்னழகைச் சுவைத்திருந்தார். திரும்பினேன். திரும்பிய என்னை, தன் கண்காட்டித் தன்னிடம் வாவென்றழைத்தார்.

கொடியும் தளிரும் என் பூவடியை அழலும் அனலுமென வருத்த வருத்த, வருந்தி, வருந்தி மெள்ள மெள்ள நடந்தேன் அவர் அருகில். அருகில் சென்ற எனைத் திரும்பி நட என்றார். அவர் மனம் நோவானேன் என்று திரும்பி நடந்தேன்.

திரும்ப அழைத்தார்; பூவடியும் பாவிடையும் அழ அழத் திரும்பி அவர் அருகு வந்தேன். என் இடையதனைத் தன் இரு கையால் பற்றி, என் காதில் வந்து மெள்ள உன்னிடை உடுக்கையிடை என்றார்.

படுக்கையறை என்றால் உரலிடையைக்கூட உடுக்கையிடை என்று தான் சொல்வார்கள் ஆண்கள். கேளேன் தலைவி! என்னவரே என் இடையையே ஒரு நாள் உடுக்கையிடை என்றார் போயேன். பிறகு உன்னவர் உன்னிடையை சொல்லத்தானா கேட்கவேண்டும்! அப்படிச் சொல்வது அவர்கள் வாடிக்கை; வேறு ஏதாவது வேடிக்கை செய்தாரோ?

மெல்ல என் மெல்லிதழை விரித்துச் சிரித்தேன் பார்! அதைப் பார்த்த அவர் இது என்னை வெல்லவோ அன்றிக் கொல்லவோ என்றார்?

(13-ம் பக்கம் பார்க்க)

# ஏற்போம்! ......எதிர்ப்போம்!

❋ லிடியா ❋

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக் கொள்கைக்கு எதிராக அரசு புதிய புதிய அடக்குமுறைகளைக் கொண்டுவர முற்படுகின்றது. இந்த அடக்கு முறைகள் உண்மையிலேயே அடக்கு முறைதானா? அடக்குமுறைக் கொள்கையினால் எப்படி விடுதலை உணர்வை நசுக்கமுடியும்? 1906–10-ல் வங்கத்தில் அடக்குமுறை என்னவானது? புரட்சியொன்றை உருவாக்கவேண்டும் என்ற எண்ணங்கொண்ட துடிப்பு மிக்க ஐம்பதினாயிரம் இளைஞரை அது தோற்றுவித்தது. அடக்குமுறையின்மூலம் நம்மை நெறிதவறச் செய்ய எண்ணுகிறார்கள் ஆள்பவர்கள். அது நம்மைத் தீட்டுப் படுத்தாது. நம் கட்டுப்பாட்டைக் கலைக்காது. நம் மரபுக்குணத்தை மாற்றாது. அடக்குமுறைக்கு ஆட்படுதலில் உள்ள இன்பத்தைச் சுவைக்கத் தெரிந்த நம்மைக் கொடுமைப்படுத்தப்படுவதில் உள்ள பெருமையை எண்ணி எண்ணிப் பூரிக்கத் தெரிந்த நம்மை—நமது விடுதலைக்காக எத்தகைய பெருந்துயரையும் ஏற்போம் என்பதில் அசைக்க முடியாத பற்றும் நம்பிக்கையும் கொண்டுள்ள நம்மை அடக்குமுறை என்னசெய்யும்?

ஆட்சிப்பீடத்தில் உள்ளவர்கள் போலிசையும், இராணுவத்தையும் துப்பாக்கி இரவைகளையும் மட்டுமே நம்பியிருக்கிறார்கள் என்பதைத்தான் அடக்குமுறைக் கொள்கை காட்டுகின்றது. நீதியறியாதவர்கள், திறமையிழந்தவர்கள், பண்பற்றவர்கள்தான் இராணுவத்தையும் அதன் ஆற்றல்களையும் நம்புவார்கள். இலட்சியத்துக்கு எதிராக, விடுதலை உணர்வுக்கு எதிராக, கொந்தளித்து ஓடிவரும் சமுதாய உரிமை வெள்ளத்துக்கு எதிராக அடக்குமுறை நிலைக்காது; நிற்காது. இத்தாலி மீது ஆஸ்திரியா அடக்குமுறையைக் கையாண்டது. இத்தாலியோ மாஜினியையும், கவூரையும், கரிபால்டியையும் ஈன்றது. இரஷ்யாவில் ஜார் மன்னர்கள் முயன்றார்கள். பெரும் புரட்சி எழுந்தது. அயர்லாந்தின்மீது இங்கிலாந்து போர் தொடுத்தது. 'ஷின்-பெய்னிசம்' "நமக்கு நாமே" என்ற விடுதலை இயக்கம் தோன்றியது. வெள்ளை ஏகாதிபத்தியம் இத்துணைக்கண்டத்திலே செய்துபார்த்தது. 'ஒத்துழையாமை இயக்கம்' பிறந்து வளர்ந்து வலுப்பெற்றது.

வெறுப்பு வெறுப்பையே தேடித்தரும்: அடக்குமுறையும் அப்படித்தான். நாம் அடக்குமுறையை எப்படி ஏற்பது? எப்படி எதிர்ப்பது? ஏற்போம்! எதிர்ப்போம்! ஏற்றுக்கொண்டே எதிர்ப்போம். பொறுமையோடும் துயரோடும் ஏற்போம்! தன்னம்பிக்கையோடும் நெஞ்சுறுதியுடனும் எதிர்ப்போம்! எதையும் தாங்கும் எளிமை உள்ளத்தோடு ஏற்போம்! ஆழ்ந்த பணிவோடு எதிர்ப்போம்! எதிர்கால வரலாற்றின் ஏடுகளில் நம் ஏற்பும் எதிர்ப்பும் உணர்ச்சிச் சொற்களால் எழுதப்படட்டும்! திராவிட உள்ளம் விடுதலைப்போரை விட்டுக் கொடுக்காது.

பெற்றவரால் வெறுக்கப்பட்ட பின்னும் அது வாழ்கிறது. தூத்துக்குடிக்குப் பின்னும், தேனிக்குப் பின்னும், கல்லக்குடிக்குப்பின்னும் அது வாழ்கிறது. பெரியபெரிய பலமுள்ள ஏடுகளின் தாக்குதலுக்குப் பின்னும் அது வாழ்கிறது. ஆளும் கட்சியின் நச்சுப் பிரச்சாரங்களையும் பயமுறுத்தல்களையும், சிறு கட்சிகளின் அறியாமையில் பிறக்கும் ஏளனப் பேச்சுக்களையும் மீறி அது வாழ்கிறது. யூதாஸ்காரியோத்துகள், மீர்ஜாபர்கள், விபீஷணர்கள், எட்டையப்பர்கள் — இவர்களைக் கண்டும் வாடாமல் வதங்காமல் வாழ்கிறது; வளர்கிறது. உலகு வியக்கும் பொதுத் தேர்தல்களில் அது தூக்கியெறியப் படவில்லை. நிலைத்தது மட்டுமல்ல, நீண்டு வளர்கிறது. எனவே, அடக்குமுறை எந்த வடிவில் வந்தாலும் அதை நாம் ஏற்பதால் நாமும், நம் கழகமும், நம் விடுதலை உணர்வும் வளருமேயன்றி வாடாது, மாறாது; மாளாது. நம் இலட்சியத்தில் நமக்குஉள்ள நம்பிக்கைப் பலத்தை எடைபோட அரசு கொண்டுவரும் அடக்குமுறை ஒரு புதிய துலாக்கோல். கண்ணியத்திலும் கடமையிலும் கட்டுப்பாட்டிலும் நமக்குஉள்ள பிடிப்பை—பற்றை, 'நம் அலட்சியத்தை அடைய நாம் செல்லும் இப்பாதை சரியானதே' என்பதில் நமக்குள்ள விசுவாசத்தை வெளிக்காட்ட நல்லதோர் வாய்ப்புக்கொடுக்கிறது அரசு. முறைபடி நாம் பயன்படுத்துவோம்.

நம் கழகத்தின்மீது அடக்குமுறைக் கொள்கையை வீசுவது என்பது அரசுக்குத் தற்காலிக மனநிறைவைத் தரலாம். ஆனால் இயக்கத்தை அவர்களால் என்ன செய்யமுடியும்? துப்பாக்கிகளின் வெடியொலிகளையும், போர்க் கருவிகளின் சலசலப்பையும், திராணியற்ற ஆதிக்க வெறியர்களின் வெற்றுரைகளையும், அடக்குமுறை அரசினரின் பயனற்ற சூழ்ச்சிகளையும்விட வரலாற்றின் வரிகள் பலமுள்ளவை; பயனுள்ளவை; பகுத்தறிவுள்ளவை.

நம்மிடையே வாழும் பல நம்மவர் இன்னும் உணர்வற்றவர்களாக உள்ளனர். இயக்கத்தை எள்ளி நகையாடுகின்றனர். அவர்கள்மீது கோபப்படவேண்டாம். சிறுபான்மையினரின் கருத்துக்களையும் மதிப்பதே குடியரசின் தலையாய பண்பு. மிகச் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படாத வரையில், குடியரசு முழுமை பெறுவதுமில்லை; வெற்றியடைவதுமில்லை. அவ்வுரிமைகளுள் ஒன்று பேச்சுரிமை. எனவே சிறு கூட்டத்தாரும் நம்மைப்பற்றிப் பேசட்டும், ஏசட்டும். அணுகுண்டைத் 'தக்ளி' என்ன செய்துவிடும்? அரசின் தாள் பற்றும் நம்மவர்களிலேயே நமக்கு உதவத் துடிக்கும் உள்ளங்கள் உண்டு. காலம் வரும். அப்பொழுது அவர்கள் சேர்ந்துகொள்வார்கள்; நாமும் சேர்த்துக்

கொள்வோம். திராவிட நாட்டுப் பிரிவினைப் பிரச்சினை அரசினரால் மட்டும் தீர்த்துவைக்கப்படுவதல்ல. அது நமக்குள்ளே நம்மவர்களாலே, இன்று நம் இலட்சியத்தைக் கேலி செய்கிற நம் இனத்தினராலும் தீர்த்து வைக்கப்படுவது. அரசு திருமணம் செய்து வைக்குமே தவிர, வாழப் போகிறவர்கள் நாமும் நம்மை இன்னும் அறியாத நம் தோழர்களுமே. எனவே நம்மை எதிர்க்கின்ற நம்மவர்கள் நன்ருகப் பேசட்டும்; நம்மைப்பற்றி அவர்கள் எண்ணுகிறபடி பேச, எழுத, அவர்களுக்கு உரிமையளிப்போம். நம் நாட்டின் வாழ்வு நம்மை ஏசுவதிலும் அடங்கியுள்ளது என்பதை அவர்கள் அறியட்டும். நாம் குடியாட்சியின் தலையாய பண்பில் நம்பிக்கையுள்ளவர்கள் என்று அவர்கள் புரியட்டும்.

ஆட்சிப்பீடத்தில் உள்ளவர்கள்,அடக்குமுறையை அவிழ்த்து விடுவதுதான் அரசியல் அறிவுடைமை என எண்ணுகிருர்கள். விடுதலை இயக்கத்தின்மீது ஏவப்படும் தவருன கணை இது என்று அவர்களுக்கு நாம் கூறுவோம். துன்பத்தையும், தொல்லையையும் துணிவுடன் ஏற்க நாம் தயார். ஏனெனில், தன்னம்பிக்கையும் தற்சார்பும், துன்பத் தொல்லைகளும் இல்லாமல் ஒரு நாடு விடுதலை அடையமுடியாது. நாம் ஒவ்வொருவரும் போர்க்களத்தில் படப்போகும் அநீதியை எதிர்பார்ப்போம். அரசு செய்வது தீமை என்பதை அறிகிருேம்; அறிவுறுத்துகின்ருேம். அதை எதிர்ப்போம். தீமையை நன்மையால் வெல்வோம். நம் உள்ளத்தில் யார்மீதும் வெறுப்பின்றித் தீமையை மட்டும் எதிர்ப்போம். அறத்தின் காவலராக, நாட்டு விடுதலையின் மெய் வீரராக அடக்குமுறையை ஏற்போம்; எதிர்ப்போம். பேராசையும் தற்பெருமையும் சமுதாயத்துக்கு நன்மை தராது. வெற்றுக் கூச்சலினுலும், வெறுப்பினுலும், கலகத்தினுலும், விடுதலை வேகத்தை இறங்கவைக்க முடியாது. தியாகம் ஒன்றினுல் மட்டுமே விடுதலை அடையமுடியும். விடுதலைப்போரின் தத்துவம் 'கணக்கீடு' செய்வதில் இல்லை. நம்பிக்கையில் அடங்கியுள்ளது. 'வெள்ளியும் பொன்னும் எவ்வளவு சேர்ந்தது?' என்று கணக்கிடும் இலாப நோக்கம் அல்ல விடுதலைப் போர். எதை இழந்தோம்? என்ன துயர்ப்பட்டோம்? எத்தனை வீரரைப் பலி கொடுத்தோம்? என்று கணக்கிடும் இழப்புக் கணக்குத்தான் விடுதலைப் போர். அதற்கு நம்மைத் தயார் செய்வோம்? எத்தனை பேர் நம்முடன் வருவார்கள்?

காட்டு வாழ்க்கை, கூட்டு வாழ்க்கை, நாட்டு வாழ்க்கை என மனித இனத்தின் வளர்ச்சியில் மூன்று கட்டங்களை நாம் காணலாம். காட்டு வாழ்க்கையில் 'தனிமை'தான் விதியாக இருந்தது. கூட்டு வாழ்க்கையில் 'உறவு'தான் விதியாக இருந்தது. இவ்விரண்டு நிலைக்கும் பிறகு, அறமும் உண்மையும் தோன்றின. இது அவ்விரண்டுக்கும் மேலான உயர் நிலையானது. அறமும் உண்மையும் கூடிய நாட்டு வாழ்க்கையில் 'தியாகம்'தான் விதியாக விளங்கியது; விளங்குகிறது; விளங்கும். தியாகத்துக்குத் தலைவணங்காத நாடு உலகில் எங்கும் இல்லை. 'ஆதிக்கம் செலுத்த வேண்டும்' என்ற உள்ளத்தில் விடுதலை உணர்வு பிறக்காது. 'துன்பப்படுவோம்! தியாகம் செய்வோம்!' என்றெண்ணும் உள்ளத்தில்தான் விடுதலை உணர்வு தோன்றும். எனவே, உண்மையான விடுதலை வீரர்களான நாம், திராவிட நந்நாட்டின் விடுதலைப் போரில் நம்மை முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கும் நாம், அரசின் அடக்குமுறையை ஏற்போம்! எதிர்ப்போம்! எதிர்பார்ப்போம்!

---

# நீயேற்றதே தொண்டு

★ கனகு ★

இந்த ஊர்க்காரர்களைப் பொறுத்தவரையில் எங்களுடைய அன்ருட வேலைத் திட்டங்கள் எளிதாகவே இருந்தன. குறிப்பாகப் பொதுச் சுகாதாரத்தைப்பற்றி அவர்களிடம் அதிகம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. தெருக்கள் எல்லாம் சுத்தமாகவே இருந்தன. எனினும் தெருப்புறங்கள், ஊருக்குள் நுழையும் வழி முதலிய இடங்கள் எல்லாச் சிற்றூர்களையும்போல இங்கும் தூய்மையின்மையைக் காட்டிக் கொண்டிருந்தன. அவற்றையும் இரண்டு வாரங்கள் தொடர்ந்து சொல்லியதன்மூலம் எளிதில் மாற்ற முடிந்தது.

அடுத்து, இந்த ஊரில் சோம்பலாக வேலையில்லாமலிருப்போராக யாருமே காணப்படவில்லை. எல்லாருமே உழைப்பாளர்களாகவே காணப்பட்டனர். எளிமையும், உழைப்பும், கவடமின்மையும் அந்தச் சிற்றூரின் புறச் சூழ்நிலையிலும், அகச் சூழ்நிலையிலும் களிநடம் புரிந்துகொண்டிருப்பதையே காண முடிந்தது.

இந்த ஊருக்கு வந்தபிறகு நானும் என்னுடைய நண்பர்களும் மேலே சட்டை போட்டுக்கொள்வதையே விட்டுவிட்டோம். கதிரைவேற் பெரியவரைப்போல் — முதல் முதல் இந்த ஊரில் எங்களை வரவேற்று உபசரித்த பெரியவர் — இடுப்பில் முழங்கால்வரை மறைக்கும் ஒரு நாலு முழ வேட்டி. மேலே ஒரு துண்டு. இதுதானே காந்தியடிகளுக்கும் பிடித்தமான உடை. ஒவ்வொரு நாளும் காலையில் அந்த ஊரைச்சுற்றி ஒருமுறை வலம் வருவோம். பிறகு அந்த வேப்பமர நிழலில் அமர்ந்து நூல் நூற்கத் தொடங்குவோம். கதிரைவேற் பெரியவர் இரண்டு நாட்கள் எங்களைச் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார். மூன்ருவது நாள் எங்களோடு உட்கார்ந்து நூற்கத் தொடங்கினர். இதில் ஒரு வேடிக்கையும், வியப்பும் நிறைந்த செய்தி என்ன தெரியுமா? கதிரைவேற் பெரியவருக்கு ஏற்கனவே நூற்கத் தெரிந்திருந்தது. அவர் சில பழைய தக்ளிகளையும், இரண்டு பழைய இராட்டைகளையும் கொண்டுவந்து என்னிடம் காட்டினர். அவர் சொன்னர்:

"எங்கள் பாட்டி காலத்தில் இந்த ஊரில் இராட்டையிலும், தக்ளியிலும் நூற்பது சர்வ சாதாரணம். அப்போது அது தேவையாகவும் இருந்தது. இப்போதுதான் அதையெல்லாம் தேவையற்றதாக்கிவிட்டார்களே வெள்ளைக்காரர்கள். நாம்

ஒரு நாள் முழுதும் இப்படி உட்கார்ந்து இராட்டையிலும், தக்ளியிலும் நூற்ருலும் வெள்ளைக்காரன் ஒரு நிமிடத்தில் நூற்றுக் காட்டுவதை நம்மால் நூற்க முடியாதே! அதனுல்தான் இந்த இராட்டையும் தக்ளியும் பயனில்லாமற் போய்விட்டன. மூலையிற் கொண்டுபோய்ப் போட்டுவிட்டார்கள் எங்கள் பெரியவர்கள்.''

நான் அந்தப் பெரியவரிடம் இராட்டையின் தத்துவத்தைப்பற்றி எடுத்துச் சொன்னேன். அதிலுள்ள புனிதத் தன்மையைப்பற்றி எடுத்துச் சொன்னேன். ஆங்கிலேயனை இந்த நாட்டை விட்டு ஓட்டுவதற்குப் பிறர்க்கு ஊறுபுரியாத பெரியதொரு அமைதிப் படையாக — ஆயுதமாக —அது இன்று பயன்பட்டு நிற்பதை எடுத்துச் சொன்னேன். 'இன்று நாட்டின் சில பகுதிகளில், குறிப்பாக நகர்ப்புறங்களில் பலர் வேலையில்லாத நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டு வருகின்றனர். அப்படி வேலையிழந்து நிற்போருக்கு ஓரளவு கூலிபெற இந்த இராட்டை நூற்பு உதவியாக இருக்கிறது' என்று சுட்டிக்காட்டினேன். அவர் எல்லா வற்றிற்கும் ஒரேயடியாகப் புன்னகை செய்துகொண்டே வந்தார். கடைசியாக நிர்மாணத் திட்டத்தின் அடிப்படைநோக்கமாகத்தன்னிறைவுக் கொள்கையை எடுத்துக்கூறி அந்தத் தன்னிறைவுக்கு இந்த நூற்பு வேலை சிறப்பாகவும் குறிப்பாகவும் பயன்படுகிறது என்பதைச் சொன்னபோது அவர் புன்னகைப்பதை நிறுத்திக்கொண்டு நான் கூறிய அந்தத் தன்னிறைவுக் கொள்கையின் செயல் முறைகளைப் பற்றியும் அதனுல் ஏற்படக்கூடிய பின் விளைவுகளைப்பற்றியும் அதன் நோக்கத்தைப்பற்றியும் விளக்கங்கள் கேட்டார்.

என்னுடைய விளக்கம் அவரை நிறைவுபடுத்தவில்லைப்போலும். அதை அவருடைய முகக்குறி காட்டிற்று.

"நீங்கள் சொன்னீர்கள் உங்களுக்குத் தேவையான உடை முழுதுக்குமான நூல் அவ்வளவையும் நீங்களே நூற்றுக்கொள்கிறீர்கள் என்று. அதன் உயர்ந்த குறிக்கோளையும், நல்ல நோக்கத்தையும் நான் வரவேற்கிறேன். அந்த நோக்கத்தில் அடங்கியுள்ள புனிதத் தன்மையை நான் மறுக்கவில்லை. உங்களுடைய இந்தப் புனிதமான கொள்கை மாசுபடாமல் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய அசை."

"நீங்கள் சொல்வது...?"

"நீங்கள் வேள்வியென்று கூறிக் கொண்டு இப்போது நூற்கிறீர்கள். கதர் உடை அணிகிறீர்கள். அதன் உயரிய தத்துவம் ஒன்றை வைத்தே ஆங்கிலேயனை இந்த நாட்டிலிருந்து ஓட்டிவிடவேண்டும், ஓட்டிவிட முடியும் என்று எண்ணுகிறீர்கள். உங்கள் எண்ணம் செயலாகட்டும் என்று நான் மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன். ஆனுல்...

"இப்போது நீங்கள் பிற உயிர்க்கு ஊறுபுரியாத மாசற்ற 'வேள்வியாக —அதாவது வேள்வியென்ற சொல்லுக்கு அடிப்படையான கருத்து என்னவோ, அதற்குப் புறம்பான கருத்தோடு — இந்த நூற்பு வேள்வியை நடத்திக்கொண்டுபோகிறீர்கள். இந்தப்பிற உயிர்க்கு ஊறு புரியாத வேள்வி எதிர்காலத்தில் ஆயிரம் உயிர்களைக் கொண்டுவந்து போட்டுப் பொசுக்கி நடத்தும் வன்கொடுமை நிறைந்த வேள்வியாக மாறிவிடக்கூடாது. அதாவது வருங் காலத்தில் இப்படி நூற்பவர்கள் வேறு வகையில் காணவேண்டிய தங்கள் சொந்த இலாபத்தை மனத்தில் தைத்துக்கொண்டு இப்படி நூற்கவந்து நிற்கக்கூடாது. வேறு வகையில் உயர்வு பெறுவதற்காக இப்படி நூற்பதையும் கதர் உடை அணிவதையும் ஊடகங்களாகப் பயன்படுத்தக்கூடாது''

"அப்படி நேரும்படி யாரும்விட்டு விடமாட்டார்கள்'' என்று நான் எடுத்த எடுப்பில் சொன்னேன். சொல்லிய பிறகுதான் அப்படி நான் சொன்னது சரியா என்ற ஐயம் என்னுள் எழுந்தது. அதோடு இந்தப் பெரியவர் ஏன் இப்படித் திடீர் வினு போடுகிருர்'' என்று எனக்குள் நானே பலமுறை கேட்டுக் கொண்டேன்.

O

இன்று கதிரைவேற்பெரியவர் எங்களோடு உட்கார்ந்து முறையாக நூற்கத் தொடங்கினுர். 'இனி அவர் ஓய்வு வேளைகளில் எல்லாம் நூற்றுக்கொண்டேயிருப்பார். கதர்தான் கட்டுவார்.

O

இன்று பட்டணத்திலிருந்து வணிகக் கோமான் ஒருவர்—காந்தி அன்பர்—என் பெயருக்கு ரூபாய் ஐயாயிரத்துக்குச் செக் ஒன்று அனுப்பியிருந்தார். அதனேடு நாங்கள் இந்தச் சிற்றூரில் வந்து நிர்மாணவேலைகளில் ஈடுபட்டு உழைப்பது அந்த வணிகக் கோமகனைப் பெரிதும் கவர்ந்துள்ளதாம். தாமும் இப்படிப் பொதுவேலையில் ஈடுபட்டு உழைப்பதற்குப் பேரவாக்கொண்டு இருக்கிருராம். ஆனுல், அவருடைய அந்தப் பேரவா நிறைவேறுவதற்கு வழியில்லையாம். காரணம், அவரால் தம்முடைய தொழில் வளர்ச்சியில் காட்டுகின்ற சிரத்தையிலிருந்து இப்படி அப்படி விலகுவதற்கு முடியாமலிருக்கின்றதாம். பிறிதொரு புறம் தாம் அப்படிக் காந்திய வேலைகளில் ஈடுபாடுகாட்டினுல் வெள்ளையரசினர் தம்முடைய வாணிபத்துக்கு ஏதேனும் இடையூறு புரிவார்களோ என்ற அச்சம் வேறு இருக்கின்றதாம். ஆகவே 'என்னுல் நேரடியாகக் கலந்துகொள்ள முடியாவிட்டாலும், நான் அளிக்கும் அன்பளிப்பாவது உங்கள் நிர்மாண வேலைகளுக்குப் பயன்படட்டும். உங்கள் தொண்டு வளரட்டும்' என்று தம் உள்ள நிலையை விரித்துக்கூறி எமக்குத் தம் வாழ்த்துக்களையும் சொல்லியிருந்தார்.

நான் அந்த 'அன்பர் அனுப்பியிருந்த கடிதத்தைமட்டும் வைத்துக் கொண்டேன். பண உண்டியைத் திரும்ப அனுப்பிவிட்டேன்.

என்னுடைய அந்தச் செய்கை என்னுடைய மற்ற நண்பர்களுக்கு வியப்பையளித்தது. 'அந்தப் பணத்தைக்கொண்டு இந்த ஊரில் ஏதாவது கட்டிடங்கள் கட்டலாம். அல்லது நம்முடைய தேவைகள் எதையாவது அதைக்கொண்டு நிறைவேற்றிக்கொண்டிருக்கலாம்'என்று அந்த நண்பர்கள் கருத்துத்தெரிவித்தார்கள். நான் சொன்னேன்:

"நாம் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டுவிட்டிருந்தால், நாம் எவ்வளவுதான் உண்மையோடு உழைத்தாலும், இந்த ஊர்மக்கள் நம்மைப்பற்றி வேறுமாதிரியாகத்தான் சொல்லவேண்டியிருக்கும். நாம் உழைப்பு என்று சொல்வது, தொண்டு என்று சொல்வது எல்லாம் அவர்கள் கண்முன் அற்பமாகப் போய்விடும். 'என்ன தொண்டு செய்கிருர்கள் இவர்கள்! ஆதாயமில்லாமலா செய்துவிட்டார்கள்! எங்கிருந்தோ இவர்களுக்குப் பணம் வருகிறது. அதைவைத்துக் கொண்டு 'நாங்கள் தொண்டு செய்கிறோம் என்று பேர்பண்ணிக் கொண்டிருக்கிருர்கள்' என்று அவர்கள் சொல்லக்கிளம்பினுல், அதை

நாம் மறுப்பதற்குப் பெரும்பாடுபட வேண்டியிருக்கும். அதன் மூலம் இங்குள்ள பலர், அல்லது சிலருடைய வெறுப்பும் ஏற்படலாம். நமக்கு எது கிடைப்பதாயிருந்தாலும், அது இந்த ஊர் மக்களிடமிருந்து கிடைக்கட்டும். அது ஒன்றேபோதும். வெளியார் உதவி நமக்குவேண்டாம்.

என் வார்த்தையைக் கேட்டுக் கதிரைவேற் பெரியவர் அயர்ந்து போய் நின்றார். இந்த நிகழ்ச்சி இந்த ஊரார் எங்களிடம்காட்டிய அன்பையும், மதிப்பையும் பின்னும் பெருக்கிற்று.

O

இன்று இந்த ஊருக்குத் தாசில்தார் வந்திருந்தார். அவர், நாங்கள் இந்த ஊரில் செய்திருக்கும் சீர்திருத்த வேலைகளைப் பாராட்டுவார் என்று எதிர்பார்த்தேன. இந்த ஊர் இளஞ் சிறுர்கள் எங்களிடம் கல்வி கற்றனர். நூல் நூற்றனர். பெரியவர்கள் சிலரும் நூற்கக் கற்றனர். பொதுச் செய்திகளில் ஓரளவு அறிவு பெற்றோர்களாகிக்கொண்டு வந்தனர். இவையெல்லாம் பாராட்டுக்குரியன என்று நான் எதிர் பார்த்தேன். அவர் ஒரு வெள்ளைக் காரர் தாசர் போலும்—இல்லையென்றால், அரசு அலுவலில் அவர் அமர்ந்திருக்க முடியுமா?—முதல் முதலில் நாங்கள் உறைந்து வந்த குடிசில்கள் அருகில் பறந்துகொண்டிருந்த கொடி அவர் பார்வையை உறுத்தியிருக்கிறது. அவர் ஊரிலுள்ள பெரியவர்களையெல்லாம் அழைத்துப் போட்ட முதற் கட்டளை என்ன தெரியுமா? பறந்துகொண்டிருக்கும் அந்தக் கொடியை இறக்கவேண்டும் என்பதுதான்.

மேலும் இந்த ஊர் மக்கள் எங்களைக் கண்டு அஞ்சி, ஒதுங்கி, ஓடும் வகையில் எதை எதையோ சொல்லிவிட்டுப் போயிருக்கிறர் அவர். அதன் எதிரொலியை அன்று மாலையே நான் கண்டேன். என்றும், என்னையோ, என் நண்பர்களையோ மரியாதையோடு, புன்னகையோடு பார்த்துவிட்டுப் பேசிவிட்டுப் போகும் சிலர் அன்று முறைத்து உறுத்து நோக்கிக் கொண்டு சென்றுர்கள்.

"கட்டுச் சோத்திலே எலியைக் கட்டி வெச்ச மாதிரி இவனுகளை எதுக்கு இங்கே கொண்டாந்து உட்காரவெச்சிக்கிட்டு இருக்கிறனுக. இவங்க இராசாங்கத்தையே எதிர்க்கிருங்களாமில்ல. அதுவும் நம்ப வெள்ளைக்கார இராசாங்கத்தை! ஆயிரம் சொன்னலும் நம்ப வெள்ளைக்கார இராசாங்கம் மாதிரி ஆகுமா? இரயிலைப் போட்டவன் அவன். கச்சேரியைக் கட்டினவன் அவன். சாலையைப் போட்டவன் அவன். அவனை எதிர்த்துக்கிட்டா சும்மா விடுவானு? அவன் கிட்டே ஏரோப்ளேன் இருக்குது. சண்டைக் கப்பல் இருக்குது. துப்பாக்கியிருக்குது! வெடிகுண்டு இருக்குது. பெரிய பெரிய பட்டாளம் இருக்குது. அவன் இலேசிலே போவானு இந்த நாட்டை விட்டுட்டு! என்னமோ நல்ல மனுசன் இன்னும் இவங்களைச் சுட்டுப் பொசுக்கிப் பூண்டோடு அழிக்காமே இருக்கிருன்! இவனுகளுக்குப் போயி நாம்ப ஒத்தாசை பண்ணலாமா? சேச்சே, இவனுகளை இங்கேயிருந்து கிளப்பறதுக்கு வழி பார்த்துடனும்.'' இப்படிச் சிலர் பேசிக்கொள்ளவும் செய்தனர். அதை நான் காதாரக் கேட்டேன். பாவம்! 'ஊமை மக்கள்' என்று காந்தியடிகள் இவர்களைப் பற்றிச் சொல்வது எவ்வளவு பெரிய உண்மை. பேசும் ஆற்றல் இருக்கிறது; வாய் இருக்கிறது. ஆனல் மற்றவர்கள் சொல்வதையே சொல்கிருர்கள்! பேசுகிருர்கள். அப்படிப் பட்டவர்களும் ஒருவகை ஊமையர் தாமே!

தாசில்தாரின் கூற்றை அப்படியே நம்பியதன் காரணமாகச் சிலர் எங்களைத் தீவிரமாக எதிர்க்கத் துணிந்தாலும், சிலருடைய ஒத்தாசை எங்களுக்கு இருக்கத்தான் செய்தது. ஆதரவு காட்டிய அந்தச் சிலரில் தலையாயவர் கதிரைவேற் பெரியவர். அந்த ஒருவரே போதுமே! ஆயிரம் ஆயிரம்பேர் எங்களை எதிர்த்து நின்றுலும், அவ்வளவு எதிர்ப்பையும் முறியடிக்கும் ஆற்றல் கதிரைவேற் பெரியவரிடம் மட்டுமே இருக்கின்றதே! அந்த ஆயிரம் பேரும் காகங்கள் என்ருல், கதிரைவேற் பெரியவர் ஒரே ஒரு கல். காகங்கள் கோடி கூடி நிற்பினும் ஒரு கல்லின் முன் நிற்குமா?

எப்படியோ ஊர் இரண்டுபட்டது என் மன உளைச்சலைப் பெருக்கத் தான் செய்தது. அந்த நிலையை மாற்றுவதற்கு இப்போதைக்கு என்னிடமும் ஆற்றலில்லை. அதற்காக நான் அயர்ந்து போய்விடவுமில்லை. மற்றவர்களிடம் நாம் சொல்ல வேண்டுவதை எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருப்போம். அவர்கள் உணரும்போது உணர்ந்துகொள்ளட்டும். நாம் மேலும் செயல் புரிந்துகொண்டே போவோம் என்ற முடிந்த துணிவோடு நான் காரிய மாற்றிக்கொண்டிருந்தேன்.

இன்று திடீர் என்று ஒரு செய்தி எட்டியது. நகர்ப்புறங்களில் பெருந் தலைவர்களை யெல்லாம் கைது செய்துகொண்டு போகின்றுர்கள் என்று. சரி...... இங்கும் போலீஸ் வேட்டை நடைபெறும். நாளையோ, மறுநாளோ — ஒருவேளை இன்னும் சில நிமிடங்களிலோ நான் என் நண்பர்கள், கதிரைவேற் பெரியவர் ஆகியோர் கைதுசெய்யப்படலாம். நாங்கள் வதியுமிடங்கள் சோதனை செய்யப்படலாம். பறிமுதல் செய்து கொண்டு போகப்பெறும் பொருள்களில் இந்த நாட் குறிப்பும் ஒன்ருக இருக்கலாம். முன்னேற்படாக இந்த நாட் குறிப்பை எங்காவது பத்திரப் படுத்திவிட வேண்டும்.

O

ஐந்தாண்டுகள் எவ்வளவு பெரிய மாறுதலை உண்டாக்கிவிட்டிருக்கின்றன. இந்த ஊர்தான் மேல் மங்கலமா? இதுதான் கதிரை வேற் பெரியவர் வாழ்ந்திருந்த சிற்றுரா? எங்கே, அதோ அந்த இடத்தில் வரிசையாக நின்று நிழல்கொடுத்த வேப்பந் தருக்கள்? வெயிலுக்கு ஒதுங்க ஒரு சிறு நிழல்கூட இல்லாத பொட்டல் காடாக அந்த இடம் மாறியிருக்கிறதே! அங்கு போடப் பட்டிருந்த பலகைக் கற்கள்கூடப் பெயர்த்து எடுக்கப்பட்டிருக்கின்றனவே! அது யார் செய்த வேலை? அந்த மரங்கள்தான் போய்விட்டன! சரி — எதிரிலிருந்த சிறிய ஏரிகூட வறண்டுபோய்க் கிடக்கின்றதே! என்ன விந்தை! முன்னே இல்லாமலிருந்து இப்போது புதிதாக இங்கு ஏற்பட்டிருப்பவை என்னென்ன? முன்னே இங்கு பள்ளிக்கூடம் இல்லை. இப்போது பள்ளியிருக்கிறது–அரசினரின் ஆதாரப்பள்ளி. பிள்ளைகள் எல்லாரும் கையில் தக்ளி வைத்துக்கொண்டிருக்கிருர்கள். சிலர் இராட்டைகளைக்கூடத் தூக்கிக்கொண்டு போகிருர்கள். ஆசிரியர்கள் எல்லாரும் கதர் கட்டியவர்களாக இருக்கிருர்கள்! ஊரில் கூடப் பலர் கதர்கட்டிக்கொண்டிருக்கிருர்களே! என்னையும், என் நண்பர்களையும் இந்த ஊரைவிட்டே துரத்தவேண்டுமென்று அப்போது பேசிக்கொண்டவர்களின் வீடுகளில் எல்லாம் இப்போது கொடிகள் பறக்கின்றனவே! பலே, நல்ல

மனமாற்றம்! முன்னே இங்கு ஐம்பது வீடுகள்! இப்போது அறுபது வீடுகள்! முன்னே இங்கு கடையென்பதே கிடையாது. இப்போது இரண்டு கடைகள். இவையெல்லாம் வரவேற்க வேண்டுவனதாம். ஆனால்...... வேறு எதையோ இந்த ஊர் இழந்துவிட்டிருப்பதாகத் தென்படுகின்றதே! அது என்னவாக இருக்கும்? ஒருவேளை கதிரை வேற் பெரியவர் — பாவம் அந்த நல்லவர் தான் மூன்ருண்டுகளுக்குப் பிறகு சிறையிலேயே இறந்துபோய்விட்டாரே!—(அவர்) இல்லாததால்தான் இந்த ஊர் எனக்கு வெறிச்சென்ற கோலத்தைக் காட்டுகின்றதோ! அவருடைய இழப்பு மட்டுமல்ல,— இந்த ஊரில் வேறு ஏதோ பெரிய மாறுதல் ஒன்றும் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. ஆமாம், இந்த ஊருக்குப் புதிதாகச் சுதந்திரம் வந்திருக்கிறதா, அல்லது இருந்த சுதந்தரம் பறிபோய் விட்டிருக்கிறதா? வெள்ளைக்காரன் போனுல் இந்த நாட்டுக்கு நல்வாழ்வு வந்துவிடும் என்று நான் முன்னேயெல்லாம் ஊரைக்கூட்டி முழங்கிக்கொண்டிருந்தேன். ஆனுல் இப்போதுள்ள நடப்புகளைப் பார்த்தால் இந்த மண்ணைவிட்டு வெளியேறிய வெள்ளைக்காரன் இங்கே சுதந்தரம் என்று எதையோ கொடுத்துவிட்டு, இங்கிருந்த நல்வாழ்வையெல்லாம் பறித்துக் கொண்டு போய்விட்டது போலல்லவா தெரிகிறது! ஆமாம், வெள்ளைக்காரன் வெளியேறியபோது இங்கிருந்து எதையும் பறித்துக்கொண்டு போனதாகத் தெரியவில்லையே! — அப்படியானுல் இங்கிருந்த நல்வாழ்வு எங்கே? அதை யார் பறித்துக் கொண்டு போனது? அதோ என் எதிரில் தெரிகின்ற ஏரி, தானே வறண்டுபோய்க் கிடப்பதுபோல் இங்கிருந்த நல்வாழ்வும்தானே எங்காவது ஓடி ஒளிந்துகொண்டுவிட்டதா? பட்டினி, பஞ்சம், என்ற சொற்களும் இல்லாமை எனும் வார்த்தையும் அளவுமீறிப் புழக்கத்துக்கு வந்துவிட்டனவே!

O

இன்று மாலையே இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும்! இன்று ஒரு நாள் இங்கிருப்பதே பெரும்பாடாகி விட்டது. அன்ரெரு நாள் நானும் என் நண்பர்களும் முன்பின் தெரியாத நிலையில் இங்கு வந்தபோது. கதிரை வேற் பெரியவர் இருந்தார். வேப்ப நிழல் இருந்தது. வேப்ப நிழல் முகமன் கூறி வரவேற்றது. கதிரைவேற் பெரியவர் உபசரணைகள் புரிந்தார். "நாங்கள் நாலு பேர்!" என்றேன் நான். "நாலு பேர் என்ன, நூறு பேரே வந்தாலும் இந்த ஊர் தாங்கும்" என்று நெஞ்சை நிமிர்த்திப் புன்னகை மலர்த்திப் பெருமிதத்தோடுகூறினுர் அவர்.

இன்று முகமன் கூற அந்த வேப்ப நிழல் இல்லை. உபசரணைகள் புரியக் கதிரைவேற் பெரியவர் இல்லை.

இன்று இந்த ஊரில் உள்ளோர் அனைவரும் எனக்கு அறிமுகமான வர்கள்தாம். அவர்கள் எல்லாரும் என்னைப் பார்ப்பதைவிட என் உடையைத்தான் பார்க்கிருர்கள். என் எய்த்திளைத்த நிலையைத்தான் பார்க்கிருர்கள்.

கதர் உடைக்கு இப்போது மகத்துவம் வந்துவிட்டதாக எல்லாரும் பேசிக்கொள்வது என் காதில் விழாமல் இல்லை. ஆனுல், அந்தக் கதர் உடை நானே நூற்ற நூலாலான கதர் உடையை நானே போட்டுக் கொண்டிருப்பது போன்றது அல்ல. நானே பலமுறை தோய்த்துத் தோய்த்துச் செம்மையேறிய—சுருக்கம் விழுந்த கதர் உடை அல்ல.

அந்த மகத்துவம் அடைந்திருக்கும் கதர் உடை யாரோ நூற்ற நூலால், எங்கோ தறியேறி — உயர்ந்த—புகழ் வாய்ந்த தையற் கலை நிபுணர்களால் தைக்கப்பெற்றுப் பளபளப்பேறிய கதர் உடை. பெட்டிபோட்டது நலுங்காமல் தும்பைப்பூவை நினைவுபடுத்தி, மல்லிகை மணமிருந்து கமழும் கதர் உடை.

பெறட்டும்! அந்த உடைகள் மகத்துவம் பெறட்டும்! அதற்காக என்னுடைய கதர் ஆடை மதிப்புப் பெறவில்லையே என்று நான் வருந்தவில்லை. பயன் கருதி — அதாவது சொந்த நன்மை கருதி நான் ஊருக்கு உழைக்க முன்வந்தவனில்லை. (இருந்தாலும் உள்ளத்தில் உள்ளதைச் சொல்லாமலிருக்கவும் முடியவில்லையே!) இதோ இப்போதே கிளம்பிவிட்டேன் இந்த ஊரிலிருந்து நான். இந்த ஊரில் தண்ணீர் குடிக்கவேண்டுமென்ருற்கூட ஊருணி நீரற்றுப்போய்க் கிடக்கிறது. விரைந்து நடக்கவேண்டும். அப்போதுதான் இருட்டு முன் சொந்த ஊர்ப்போய்ச் சேரமுடியும்.

O

இப்படி, வரிசையாக நாட்கள் குறிக்கப்பட்டு ஒன்றுசேர்க்கப்பட்டிருந்த அந்தத் தாள்களில் மேலும் சில பக்கங்களிருந்தன. எல்லாவற்றையும் படித்துமுடிக்கத்தான் அப்போதைக்கு நேரமில்லையே.

அந்தக் குறிப்புக்கள் தன்னலமற்ற பொதுத்தொண்டின் வரையறை விளக்கமாக இலங்கின. பழைய நாட்டுப்புறச் சூழ்நிலையை, அந்நாள் மக்கள் அங்கு பழகி வந்த முறைகளை, செழுமையோடு, கொழிப்போடு அவர்கள் வாழ்ந்திருந்த பெற்றியை, வந்தாரையெல்லாம் வரவேற்கும் சீரிய தன்மையை அந்தக் குறிப்புக்கள் விளக்கின. நாட்டுப்புறத்துப் பின்புறச் சூழல் எப்படித் தென்படும் என்பதை ஆங்காங்கே சித்தரித்துநின்ற வருணனைகள் கூறின. அது போற்றிப் பாதுகாக்கப்படவேண்டியதொரு வரலாற்றுக் குறிப்பு நூல். அதைப் படித்துப் பயன்பெறலாம். அதில் பக்கந்தோறும், பக்கந்தோறும் சொட்டிக் கொண்டிருக்கும் இன்சுவைத் தமிழ்த்தேனை மாந்திக் களிப்புறலாம்.

எதிரிலிருந்த ஐயையை நான் நிமிர்ந்து நோக்கினேன் "இந்த நாட் குறிப்புக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு?" என்று நான் வார்த்தை கொண்டு வினவவில்லை. என் பார்வை அப்படி வினுத் தொடுத்தது. அதைப் புரிந்துகொண்டது போல் ஐயை பேசினுள்:

"இந்தக் குறிப்புக்கள் என் தந்தை யார் எழுதிய குறிப்புக்கள். இவற்றை நானும் நீண்ட நாட்கள் பார்க்கவில்லை. ஒரு மாதத்துக்கு முன்புதான் இவை என் கைக்குச் சிக்கின."

ஐயை அப்படிக் கூறியபோது என்னை யறியாமலே ஒரு பரிவும், மரியாதையும் ஐயைமீது ஏற்பட்டது எனக்கு! 'அடடே நாட்டுப் பற்றும், பொது நோக்கும் நிறைந்த ஒரு பண்பாளரின் அருமைப் புதல்வியா ஐயை! அப்படிப்பட்ட ஒரு செம்மையாளரின் திருப்புதல்வியா இப்படி.....' நான் எண்ணி முடிக்கவில்லை. ஐயை பேசினுள்.

(தொடரும்)

# வாழ்க!

—[ மாமூலன் ]—

நீலவான வெளியில் கோலம் போட்டதுபோல முகிற்கூட்டம் வேடிக்கைசெய்துகொண்டிருந்தது. பத்து ஆண்டுகளுக்குமேலாக எனக்கு பழகிப்போன இடம்தான். மாலை ஆறுமணிக்குமேல் இரவு எட்டுமணிவரை இந்த அணிவகுப்புத் திடலில் என்னைப் பார்க்கலாம். இருபுறமும் சுற்றிச்செல்லும் சாலைகள் எப்பொழுதுமே சுறுசுறுப்பாக இருக்கும். ஆனாலும் அணிவகுப்புத் திடலில் என்னைக் கவர்ந்த 'அலாதியான அமைதி'நிலவும் அந்த அமைதியில் எனக்கு ஏற்படும்மனநிறைவு கொஞ்சமா?

என்னைப்போல ஆசைக்கனவுகளை அழித்துக்கொண்டு அவிந்துபோன வாழ்வோடுபோராடிக் கொண்டிருப்பவர்கள் ஆறுதல்தரும் அவ்வமைதியை நாடாமல் இருக்க முடியுமா? நாள் தவறாது மாலை ஆறு மணிக்கு அணிவகுப்புத்திடலில் நான் காட்சி அளிக்கும் இரகசியம் இதுதான்:

அதற்கு முன்னால் இரண்டுமணி நேரம் 'பாசறைப் பூங்காவில், இருப்பேன், அங்கே வானொலி வைப்பவர் ஒரு தமிழர். தமிழ் நெஞ்சத்தில் ஊறும் இசை உணர்ச்சியாலோ என்னவோ, மாலைநேரத்தில் அகில பாரதத்தின் ஆகாஷவாணியை திருப்பாமல் இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பை வைப்பார். அதில் ஒலிக்கும் தமிழ்த் திரைப் பாடல்களைக் கேட்க நான்குமணி முதல் அங்கு இருப்பேன்.

அன்று வழக்கம்போல பாசறைப் பூங்காவில் அமர்ந்திருந்தேன். நான் ஒரு தமிழ்ப் புத்தகத்தை படித்துக் கொண்டிருக்கும்பொழுது அட்டையில் உள்ள பெயரை யாரோ ஒரு சிறுவன் படித்தான்.

'தமிழ் நெஞ்சம்' —ஒவ்வொரு எழுத்தாக அந்தச் சிறுவன் எழுத்துக் கூட்டிப் படித்தது எனக்குத் தமிழைவிட இனித்தது.

"தம்பி" நான் அந்தப் பையனை கூப்பிட்டேன்.

"என்ன மாமா, தமிழ் பேசறேன் என்றுஆச்சரியப்படுறீங்களா? நாங்களும் தமிழ்நாட்டுக்காறங்கதான்"

மழலை தவழப் பேசினான் அந்தச் சிறுவன்.

"நான், நீ தமிழ் பேசுவதினால் ஆச்சரியப்படவே தம்பி! இந்தப் பகுதியிலேதான் நிறையத் தமிழர்கள் இருக்கிறார்களே! இராணுவத்திலேருப்பவங்களிலே பாதிப்பேர் தமிழர்கள்தானே. 'கார்கானு' பகுதியிலேயும் 'பொல்லாரத்திலே' பெரும்பாலும் தமிழர்கள்தானே இருக்கிறார்கள்......அதனாலே நீ தமிழ்பேசுவதுக்கண்டு நான் வியப்படையவில்லை. ஆனால் அந்த உச்சரிப்பில், மொழியின் இனிமையில் மயங்கினேன்" நான் சொன்னது அந்தப் பையனுக்கு விளங்கியது என்னவோ? ஆனால் பெரிய மனிதன் போல் கேட்டுக்கொண்டான்.

அப்பொழுது அவனைத் தேடிக் கொண்டு அவன் தமக்கை வந்தாள் அவனைவிட அவள் அழகாக இருந்தாள், அவளுக்குவயது எட்டு இருக்கும். அவனுக்கு வயது ஆறு இருக்கும். அவன் தன் தமக்கையை எனக்கு அறிமுகப்படுத்திவைத்தான்.

அவள் பெயர் மேகலை. அவன் பெயர் செல்வன். இதுதான் அவர்கள் எனக்கு தந்தவிவரம். அவர்களைப் பூங்காவிற்கு அழைத்துவந்த அவர்கள் வீட்டுப்பணியாள் சோமையா தந்த விவரமோ அவர்கள் தந்தை இராணுவ ஆபிசில் பெரிய அதிகாரி; இதுதான் நான் அவர்களைப்பற்றி அறிந்துகொண்டது. எனினும் நெடுநாள் நெருங்கிப் பழகியவர்கள்போல அந்தக் குழந்தைகள் என்னுடன் பழகின.

அந்தப் பிணைப்பிலே எனக்கொரு இன்பம் தோன்றத்தான் செய்தது. அதனால் நாள் தவறாது அவர்களைக் காணப் பாசறைப் பூங்காவிற்குச் செல்வேன்.

ஒரு நாள் செல்வன் கேட்டான் "ஏன் மாமா எங்களைப்போல உங்கள் வீட்டில் குழந்தைகள் இல்லையா? ஒருநாள் கூடப் பூங்காவிற்கு அழைத்துவர மாட்டேங்கிறீங்களே?"

மேகலையும் கேட்டாள் "ஏன் மாமா, எங்க அப்பா ஈவினிங்லே அம்மாவை அழைச்சிகிட்டு வெளியே போற மாதிரி நீங்கள் மாமியை அழைச்சிகிட்டு போக மாட்டீங்களா? தனியாகத்தானே இங்கே வர்றீங்க"

ஆமாம் அந்தப் பிஞ்சு நெஞ்சங்கள் என்னைக் கேட்டன. அவர்களுக்குப் பதில் சொல்லாமல் சிரித்து மழுப்பிவிட்டுப் பேச்சை வேறு திசையில் திருப்பினேன்.

அவர்கள் இருக்கும் வரைதான் என் பேச்சையும் நினைவையும் வேறு வழியில் செலுத்தமுடிந்தது. அவர்கள் சென்ற பிறகு, அணிவகுப்புத் திடலில் நான் தனியாக அமர்ந்திருக்கும் பொழுது என் நினைவு கடந்த கால வாழ்வை நோக்கி ஓடியது. நீலவானைப் பார்த்தேன். அங்கே முகில் கூட்டங்கள் கோலம்போட்டதுபோல சுழன்றுகிடந்தன. என் நெஞ்சத் திரையிலும் நினைவுகள் சுழன்றன.

O

காவிரி நீரால் ஈரமாகும் வளம் கொஞ்சும் தஞ்சையின் மண்தான் நான் பிறந்த மண். பிறந்த பொழுதே பெற்றவர்களை இழந்து விட்டாலும், அவர்கள் விட்டுச் சென்ற சொத்து, நான் வளரவும், என் உயர்நிலைக் கல்வி நிறையவும் உதவியது.

வேளாண்மையில் எனக்கு விருப்பம் மிகுந்து இருந்தாலும், உழுதுண்டு வாழ ஒரு குழி நிலம்கூட எனக்குச் சொந்தத்தில் கிடையாது. அந்தக் குறையை நீக்க வந்தார் பொன்னப்பர்.

அவர் என் தந்தையின் நெருங்கிய நண்பர். தன் உழைப்பாலும் திறமையாலும் இன்று சீரோடும் செல்வச் சிறப்போடு வாழ்பவர். அவருடைய நிலபுலன்களைக் கவனிக்கும் பொறுப்பை எனக்குஅளித்தார். நான் அகமகிழ்ந்தேன். அதனினும் மகிழ்ச்சி எனக்கு தந்தது அவருடைய புதல்வி மங்கையின் நட்பு. ஆமாம் அவளுடைய அன்புக்கு அடிமையானேன்.

காலம் நீள, அவள் என் கருத்தின் நினைவானாள், உருவின் உயிரானாள்! நானே அவளின் கண்ணின் ஒளியானேன், எங்கள் காதல் வாழ்வு தொடர்ந்தது. மணவாழ்வை எதிர்நோக்கினேன். இதுவரை நல்லவராய்க் காட்சியளித்த பொன்னப்பர் பொல்லாதவராய்க் காட்சியளிக்கத் தொடங்கினார். செல்வ நிலையை ஏற்றத் தாழ்வாகக் காட்டினார். மங்கையை மணக்க எனக்கு தகுதி இல்லை என்றார். அவளுடைய இதயத்தையே எனக்கு அளித்து விட்டாள். ஆனால் அவளைப் பெற்றவரோ கைநிறைய உனக்குப் பொருளில்லை என்றார்.

கைநிறையப் பொருள் தேடப் புறப்பட்டேன். நான் வரும்வரை காத்திருக்கத் துணிந்தாள் மங்கை,

அலுவல் தேடிச் சென்ற என்னைப் பரந்த இவ்வுலகில் எந்தத் துறையும் 'வருகவென' வரவேற்கத் துணிய வில்லை. அந்த நேரத்தில் இராணு வம் ஒன்றுதான் என்னை ஏற்றுக் கொண்டது. ஆமாம் நான் இராணு வத்தில் சேர்ந்தேன். அதில் விமா னப் படைப் பிரிவில் பயிற்சியும் பெற்றேன். வடநாட்டில் பல இடங் களில் இருந்தேன். பெங்களூரில் சில காலமும், பின்னர் செகந்திரா பாத்திலும் இருந்தேன். அப்பொழுது ஒரு நாள் 'பேகம் பேட்' விமான நிலை யத்தில் விமானப் பயிற்சி நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது நான் சென்றுகொண்டிருந்த விமா னத்துடன் புதிதாகப் பயிற்சி பெறு பவர் ஓட்டிவந்த விமானம் மோதிய தால் ஏற்பட்ட விபத்து என் கை எலும்புகளை நொருங்கச் செய்தது.

எனக்குக் கையுண்டு; ஆனால் பயனில்லை, இரு கைகளிலும் முழு தும் எலும்பு கிடையாது; எந்தப் பலமான செயல்களையும் என்னால் செய்யமுடியாது. புத்தகத்தைக் கூட அதிக நேரம் என் கையில் வைத்திருக்கமுடியாது. எனவே, இராணுவம் விடை கொடுத்தது. நான் பணியாற்றியதின் நினைவாக மாதம்தோறும் உதவிச் சம்பளம் வழங்கியது.

அந்தப் பணத்துடன் திண்டுக்கல் காரரின் நெய்க் கடையில் காலையில் கணக்கெழுதுவதால் வரும் ஊதிய மும் நான் வாழ்க்கை நடத்த உதவி யது. இந்த நிலையில் எனக்குத் தமி ழகம் திரும்பும் நினைவே வரவில்லை. கை நிறையப் பொருளோடு வரு வேன் என்று மங்கையிடம் சொல்லி வந்தவன் கைநிறைய 'வலிவோடு' செல்லும் வகை கெட்டு இருந்த பொழுது ஊர் திரும்பும் நினைப்பு எதற்கு?

வலுவிழந்த கைகளையுடைய துணைவனோடு வாழ்க்கை நடத்த மங்கையின் மனம் இசைந்தாலும், அவள் தந்தை ஒப்புவாரா? எனக் காக அவள் எவ்வளவு நாள் காத் திருப்பாள்? இவைகளுக்கு விடை யாக-நான் மாண்டுவிட்டதாகச் செய்தியை ஊருக்கு அனுப்பினேன்.

பிறகு என் வாழ்க்கை செகந்திரா பாத்துடன் ஐக்கியமாயிற்று. எனக்கு சிவாஜி நகர் சங்கர வீதி யில் குடியிருப்பு. மாருதி சாலைக்கு அருகாமையில் புகை வண்டி நிலை யம் செல்லும் வழியில் உள்ள திண்டுக்கல்காரரின் நெய்க்கடை யில் கணக்கு எழுதும் அலுவல். காலையில் மாலையில் எனது பொழுது போக்கு இடங்கள்தான் பாசறைப் பூங்காவும், அணிவகுப்புத் திடலும், ஆமாம், இப்படித்தான் நான் வாணாளைக் குறைத்துக்கொண்டு வந்தேன்.

என் சிந்தனைக்குத் தடை போடு வதுபோல மழைத் தூறல் போடத் தொடங்கியது. நான் எழுந்தேன். பழைய நினைவுகளினால் எழுந்த மனக் கலக்கத்தை மறக்க 'டிவோலி' திரைப்பட அரங்கை நோக்கி நடந்தேன்.

அது ஓர் ஆங்கிலப் படம். காத லித்த கன்னிக்காக ஓடாக உழைத்து உருக்குலைந்து வருகிறான் அவன். அதற்குள்ளாக அவளோ யாரிடத்தில் அவன் உழைத்து உருக்குலைகிறானோ, அவனது மனப் பீடத்தில் அமருபவளாகி விடுகிறாள். ஏமாந்தவன் பழியுணர்ச்சியால் நிரப் பப்படுகிறான்......என்னால் இதற்கு மேல் படத்தைப் பார்க்க முடிய வில்லை. இடைவேளை வந்தது. எழுந்து செல்வோம் என்ற எண் ணத்தோடு வெளியே கிளம்பினேன். அப்பொழுது ... மேல் வகுப்பில்... ஆமாம் அது மங்கையேதான். வியப்பு மிகுதியால் மீண்டும் நோக்கி னேன். அவள் அருகே அமர்ந் திருந்தது அவள் கணவனாக இருக்க லாம். மன அதிர்ச்சியிலிருந்து மீள விரைந்து திரைப்படக் கொட்டகை யிலிருந்து வெளியேறினேன்.

*

மறுநாள் நெய்க் கடைக்காரரின் உறவினர் உதகையிலிருந்து வந் திருந்தார். அவர் மிகவும் வேண்டி யதால் அவருடன் சென்றேன். கோல்கொண்டா போர்ட், சார்மினார், மியூசியம், பப்ளிக் கார்டன் இப்படி ஐதராபாத்தில் அன்று மாலை வரை கழிக்க நேர்ந்தது. திரும்பும்பொழுது 'உசேன் சாகர்' ஏரிக்கரையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம்.

உதகை நண்பர் டெக்கான் பகுதி யின் வறட்சி நிலையைக் காட்டி, உதகையின் செழுமையில் வாழ- அவருக்குத் துணையாக இருக்க என்னை அழைத்தார். அப்பொழுது எங்கள் ஓரமாக நாலைந்து வடக்கத் திப் பெண்களோடு மங்கை நடந்து சென்றாள். அந்தப் பெண்களின் நடையும் உடையும் தோற்றமும் மங்கையின் கணவன் பெரிய ஆபீச ராகத்தான் இருக்கவேண்டும் என்று உணர்த்தியது. எது எப்படி இருந் தால் என்ன? அவளைப் பார்க்கும் பொழுது என்னை அறியாமல் எனக் குள் ஓர் ஏக்கமும் கலக்கமும் எழுந் தது,

இந்தக் குழப்பத்திலிருந்து விடுபட மங்கையைக் காணாமலிருக்க அந்த நண்பருடன் உதகைக்கு செல்ல விரும்பினேன். எனக்குக் கிடைக் கும் அந்த உதவித் தொகையை உதகையில் வாங்கிக்கொள்ள ஆவன செய்வதற்காக அலைந்தேன். பத்தாண்டுகளுக்கு மேலாகப் பழகி யிருந்த செகந்திராபாத் நகரிலிருந்து விடைபெற்றுக் கொள்ளத் துணிந் தேன்...அணிவகுப்புத் திடல்- பாச றைப் பூங்கா, மேகலை, செல்வம் அனைவரிடமிருந்தும்தான்.

*

"ஏன் மாமா இரண்டு நாட்களாக உங்களை இங்கே காணோம்?" செல் வம் கேட்டான். நான் அதற்குப் பதில் சொல்லவில்லை.

"நான் தமிழ் நாட்டுக்கு போகி றேன் செல்வம்"

"அப்புறம், இங்கே வரவே மாட் டீங்களா மாமா." மேகலை ஏக்கத் தோடு கேட்டாள்.

நான், மேகலைக்கும் செல்வத்திற் கும் ஏதேதோ பதில் சொன்னேன். பிரிவாற்றாமையால் அந்தப் பிஞ்சு நெஞ்சங்கள் எழுப்பிய வினாக்கள். அன்பின் ஆற்றலை எனக்கு உணர்த் தின. அந்தக் குழந்தைகள் யாரோ? நான் யாரோ? பூங்காவில் முகிழ்த்த எங்கள் தொடர்புக்கு இவ்வளவு ஆற்றலா?

முடிவாக, மறுநாள் தனக்குப் பிறந்தநாள் விழா, அதற்கு காலையி லேயே நான் வரவேண்டும் என்று மேகலை கேட்டுக்கொண்டாள். அவ ளுடைய விருப்பத்தை என்னால் புறக்கணிக்க முடியவில்லை. நான் வருவதாக ஒப்புக்கொண்டேன். சோமையாவிடம் அவர்களுடைய வீட்டு முகவரியைத்தெரிந்துகொண் டேன்.

"நாளை மறுநாள் நாம் கிளம்ப வேண்டும்" என்றார் உதகைக்காரர். ஆதலால், எனது உதவித் தொகையை உதகையில் பெற்றுக் கொள்ள முகவரியை மாற்றச்சென் றேன். ஆனால் அலுவலக அதிகாரி உடனடியாக முடியாது, மூன்று திங்களுக்குப் பிறகு பார்ப்போம் என்றார். அவர் ஒரு தமிழர். என் நிலையைச் சொன்னேன், அவர் இசையவில்லை. உதகை கருவூலத் திற்கு மாற்றி தருவதில் அவருக்கு இழப்பு என்னவோ? எனக்கு ஏமாற் றமும் ஆத்திரமும்தான் மிகுந்தது. எனவே, காலையில் மேகலையின் இல் லத்திற்கு வருவதாகச் சொல்லி யிருந்ததை மறந்துவிட்டேன். மாலை யில் மேகலை பூங்காவுக்கு வருமுன்

செல்லவேண்டும் என்று பழங்களும் அவளுக்குப் பரிசாக ஒரு பேனுவும் வாங்கிக்கொண்டு சைக்கிள் ரிக்ஷாவில் சென்றேன்.

பின்னுல், சைகிள் ரிக்ஷாகாரர் பழங்களை எடுத்துவர நான் உள்ளே நுழைந்தேன். நுழைந்தவுடன் எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. மேகலேயின் தந்தைதான் உதகையில் உதவித் தொகையை பெற்றுக் கொள்ள மாற்றித்தர முடியாது என்ற அதிகாரி. என் அதிர்ச்சி நீங்குவதற்குள் அவர் என்னைத் தவருக மதிப்பிடத் தொடங்கினுர். அவருக்கு இலஞ்சம் கொடுத்து, எனது காரியத்தை முடித்துக்கொள்ள வந்திருப்பதாகக் குற்றம் சாட்டினுர். என்னைப் பேசவிடாமல் அவரே பேசிக்கொண்டு போனுர். அப்பொழுது எதிர்பாரா விதமாகஅங்கே வந்த அவர் மனைவி—ஆம், மங்கையேதான். எனக்கு வியப்புக்குமேல் வியப்பு. அதிர்ச்சிக்குமேல் அதிர்ச்சி!

கொஞ்சமாவது என்னைத் தெரிந்தவள்போல் மங்கை காட்டிக் கொள்ள வேண்டுமே? அதுதான் கிடையாது. பேசாமலாவது இருக்க வேண்டுமே? அவளும் கணவனுடன் சேர்ந்துகொண்டு என்னைச் சாடினுள். இவர் போன்றவர்களைச் சும்மா விடக்கூடாது. தமிழ்நாட்டுக்காரர்கள் என்று பார்த்தால் இவ்வளவு துணிவோடு இலஞ்சம் கொடுக்க வந்துவிடுகிருர்கள்.இலஞ்சம் வாங்குபவர்களைக் காட்டிலும் இலஞ்சம் தருபவர்களே நாட்டுக்கு கேடுமிக நினைப்பவர்கள்' என்ருள், என்னை வெளியே பிடித்துத் தள்ளாத குறையாக. நான் மௌனமாக வெளியேறத் திரும்பினேன்.

அப்பொழுது "மாமா" என்று அழைத்தப்படி மேகலே ஓடிவந்தாள். மங்கையின் அதட்டல் அவளைத் தடுத்து நிறுத்தியது. நான் வேகமாக வெளியே நடந்தேன். 'தங்கள் காரியத்திற்காகக் குழந்தைகளைக் கூடக்காக்காய் பிடித்து வைத்திருக்கிருர்கள்' மங்கை சொன்னது என் காதில் தெளிவாய் விழுந்தது.

பழங்களை ரிக்ஷாக்காரரை எடுத்துச்செல்லும்படி சொன்னேன். நான் நடந்துசென்றேன். என் மனதில் அலாதியான ஓர் அமைதி நிலவியது. என்னுள்ளத்தில் எந்தவித சலனமும் இல்லே. என்னை மங்கை எப்படி மதிப்பிட்டாலும் அவள் 'வாழ்க'வென வாழ்த்தினேன்.

○

அது சென்னை செல்லும் விரைவு வண்டித் தொடர். நானும் உதகைக் காரரும் தமிழ்நிலம் நோக்கி வந்து கொண்டிருந்தோம். உள்ளத்தில் நிரம்பியிருந்த புதியதொரு உணர்வால் நான் புதிய மனிதனுகவே இருந்தேன். நெய்க்கடைக்காரர்தன்னுடைய முயற்சியால் நான் உதகையிலே உதவித் தொகை பெற ஏற்பாடு செய்வதாகக் கூறினுர்.கிடைத்தால் கிடைக்கட்டும், இல்லாவிடில் உழைத்து வாழப் புதிய தெம்பு என்னிடம் இருக்கிறது என்று சொல்லி விட்டுக் கிளம்பினேன்.

புகைவண்டி 'காசிப்பேட்' நிலேயத்தில் நின்றது. ஏதோ வாங்குவதற்காகப் பெட்டியை திறந்த உதகை நண்பர், ஒரு கடிதத்தை எடுத்துக்கொடுத்துவிட்டுச் சொன்னுர்:

"மறந்துவிட்டேன், காலேயில் யாரோ நண்பரிடம் சொல்லிக் கொள்ள 'பொல்லாரம்' நீங்கள் போயிருந்தபொழுது, சோமையா என்பவர் கொண்டுவந்து கொடுத்தார்."

அந்தக் கடிதம் மங்கையால் எழுதப்பட்டது. அது, இது.

உடன்பிறந்தவரே!

இப்படி அழைக்கும் நிலேயில் உள்ள மங்கை எழுதுகிறேன். நெடு நாட்களுக்குப் பிறகு என்னை நீங்கள் சந்தித்தபொழுது, நான் நடந்து கொண்ட முறையால் என்னைப் பற்றி என்ன நினைப்பீர்கள் என்பதை நான் அறிவேன். இருந்தும் உங்களுக்கு கடிதம் வரைகிறேன்.

கைநிரம்பப் பொருளோடு வருவேன், உன் கரம் பிடிப்பேன், காத்திரு அதுவரை என்று சொல்லி வந்த தாங்கள்—கைகள் இருந்தும் பயனற்றவைகளாய் மாறியதால், மனமுடைந்து மரணம் அடைந்ததாகச் செய்தி அனுப்பினீர்கள். அதுவரை நான் காத்திருப்பதாக நினைத்தீர்களோ? என்னவோ? ஆனுல் நீங்கள் அனுப்பிய செய்தி வருவதற்கு ஓராண்டுக்கு முன்பே எனக்குத் திருமணம் நடைபெற்றது. என் கணவர் மிகவும் நல்லவர். அவரிடம் நான் எதையும் மறைத்தது கிடையாது. உங்களேப்பற்றிய உண்மை நிலேயை அவரிடம் சொன்னேன். உங்கள் புகைப் படத்தைக்கூடக் காட்டினேன். காலம் ஓடிற்று.

நாங்கள் செகந்திராபாத்திற்கு மாற்றலாகினேம். அவர் இராணுவத்தின் அலுவல் பிரிவில் பணியாற்றுபவர். ஒரு நாள், உடல் வலிவு கெட்டு உதவி பெறுபவர்கள் பகுதியில் உங்கள் படத்தைப் பார்த்ததாகக் கூறி, அதிலுள்ள விவரங்களேயும்தெரிவித்தார். நீங்கள் இங்கு இருப்பதாக நம்பினேன்; என் நம்பிக்கை உறுதிபடுத்தும் வகையில், 'கிங்ஸ் வே'யில் ஒருநாள் பார்த்தேன். பின்னர் பாசறைப் பூங்காவில் என் குழைந்தகளோடு பழகி வருவதையும், நெய்க்கடை ஒன்றில் பணியாற்றுவதையும் எங்கள் பணியாள் சோமையா மூலம் அறிந்தேன். இந்த நிலேயில் 'டிவோலி' திரைப்பட அரங்கில் நீங்கள் என்னைப் பார்த்தவுடன் அடைந்த அதிர்ச்சியினுல் வெளியேறியதையும் கண்டேன்.

நடந்துபோன நிகழ்ச்சிகளே மறந்துவிட முடியாவிட்டாலும் மனதிலே மறைத்துக்கொள்ளும்திறமை ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிகம். ஆனுல் மறக்கமுடியாமலும் மனதில் அடக்கமுடியாமலும் அமைதி குலேயும் உங்கள் நிலேயைத் தெளிவாக அறிந்தேன். என்னுல் தாங்கள் ஊர் மாறவேண்டாம் என்று, என் கணவரை வேண்டிக் கொண்டேன். அவரும் தங்கள் உதவித் தொகையை வேறிடத்தில் உடனே பெற்றுக்கொள்ளமுடியாது என்று சொல்லிவிட்டார். நீங்கள் இங்கிருந்து செல்லவேண்டாம் என்பதற்காக! அதுமட்டுமா மேகலேயின் பிறந்த நாளுக்காக வீடு தேடி வந்த தங்களை, வேறு காரணம் காட்டி அயலவர்போல நடந்து கொண்டது—என்னுல் நீங்கள் வேறிடம் செல்லவேண்டாம் என்பதால் தான்.

உங்கள் வாழ்வில் மகிழ்வுஅளிக்க முடியாவிட்டாலும் அமைதியைக் குலேக்க நான் தயாராக இல்லே. பத்துஆண்டுகளாகப் பழகியஇடத்திலிருந்து உங்களை விரட்ட எனக்கு என்ன உரிமை? என் கணவரே அடுத்த திங்களே பெங்களூர் மாற்றலாகிருர். நாங்கள் பெங்களூர் போகிரும். நீங்கள் இங்கேயே வாழுங்கள். நான் நடந்துகொண்ட முறைக்காக என்னை மன்னியுங்கள்.

உங்கள் தங்கை,
மங்கை.

பகைவனுக்கும் அருளும் நெஞ்சத்தால் முதலில் 'வாழ்க' என்று வாழ்த்தினேன் — மங்கையின் உள்ளப் பாங்கை உணர்ந்துஇப்பொழுது 'வாழ்க' வென வாழ்த்தினேன்.

என் உள்ளத்தை உணர்ந்தது போலப் புகைவண்டியும் 'ஒலி' எழுப்பிக்கொண்டு சென்னை நோக்கி ஓடியது.

✻

4-ம் பக்கத் தொடர்ச்சி

தலைவி! நீங்கள் என்ன சொன்னீர்கள்.

'வெல்லத்தான்' என்றேன்.

தவறு தலைவி தவறு. 'கொல்லத்தான்' என்று சொல்லியிருக்க வேண்டும். ஆண்களைப் புன்னகையால் கொன்றுல்தான் வென்றதாகப் பொருள். பிறகு,

மெள்ள என் அருகில் வந்தார். அள்ளவோ அன்றி அணைக்கவோ என்று கேட்டார். நான் பேசாமல் நின்றேனு? மெள்ளவேனும் நின் கிள்ளைமொழி கொஞ்சம் உதிரேன் என்றுர். மீண்டும் பேசாமல் நின்றேனு? நின்னைக் கிள்ளாமல் நின் கிள்ளை மொழியின்பம் கிடைக்காதோ என்றுர்? மீண்டும் பேசாமலே நின்றேன். ஏன் இப்படிக் கடைக் கண்ணில் கள்ளத்தைத் தேக்கிவைத்து என் உள்ளத்தைக் கிள்ளுகிருய் எனக் கேட்டார். உன் இடை என்னிடம் துள்ளுகிற எனைக் கொஞ்சம் துவளும்வரை அள்ளுங்கள் அணையுங்கள் என்கிறது! நீயேன் பேச மறுக்கிருய் எனக் கேட்டார்.

மெல்லியலே! நின் இடையோ மின்னலெனத் தோன்றும் மறையும். இன்னிலையில் ஆடையேன் அதற்கென்பார். ஆடைதனைத் தளர்த்தவோ நெகிழ்த்தவோ அன்றி அதனை அவிழ்த்துத்தான் எறியவோ சொல் நீ! எனக்கேட்டுச் சொல்வீரம் காட்டாமல் செயல் வீரம் காட்டினர் அந்தச் செயல் நாடும் காளை.

கொம்பணைந்த கொடியானேன் நான். கொடி தழுவும் கொம்பானுர் அவர்.

புள்ளினங்கள் ஒவ்வொன்றுய்க் குரலெடுத்துக் கூவின. அவரோடு கலை பயின்று களைப்புற்றுக் கண்ணயர்ந்த நான், யாரோ வா வா வென அழைப்பதாக உணர்ந்தேன்; எழுந்தேன். குயில்தான் கூகூ என்றதே தவிர, என்னை வாவாவென்றவர் யாரையும் காணேன்.

ஆமாம் தலைவி! அவரில்லையா அங்கு! நள்ளிரவின் துணையோடு நழுவினுரோ மெள்ள!

புள்ளினம் எழுப்ப எழுந்த நான் ...ஆடையின்றி அந்தப் புன்னை நிழலில் உறங்கியுள்ளேன் என்பதை உணர்ந்தேன். நாணம் வருமுன் அருகில் கிடந்த ஆடையை எடுத்தேன். உடுத்தேன்.

பிறகு அவரைத் தேடி நடந்தேன்.

இருந்தால்தானே அவர். நீ சொன்னதுபோல் நள்ளிரவின் துணையோடு நழுவிவிட்டார்.

எனைவிட்டு சென்றவரை, வாய் விட்டுத் தூற்றிவிட்டுப் புன்னை நிழல் விட்டுப் புறப்பட்டு நிலவின் ஒளியில் நடந்தேன்.

பின்னிருந்து யாரோ சிரிப்பொலியைச் சிந்தினுர்கள்.

அஞ்சி! நடுங்கி! யாரங்கே! எனக் கேட்டேன் நான். 'நில்' என்று சொல்லிய குரல் நின்றது. இதயம் நின்றதுவோ என அஞ்சி இதயத்தில் கைவைத்துப் பார்த்தேன். சற்று நின்றேன். யாரையும் காணேன்; மெள்ள மெள்ள,

காற் சிலப்பு இசையதனைக் கொஞ்ச! கொஞ்ச!! மென்னிடை வஞ்சியைக் கெஞ்ச! கெஞ்ச!! வஞ்சமில் நெஞ்சம் பயத்தால் அஞ்ச! அஞ்ச!! பிஞ்சடிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி நகர்த்தி இஞ்சியும் மஞ்சளும் நிறைந்த அந்த இருட் காட்டில் வஞ்சி நான் அஞ்சி அஞ்சி நடந்தேன்.

நில்லென்ற சொல் மீண்டும் நெருப்பெனப் பாய்ந்தது என் செவியில்.

கொல்லென்ற சிரிப்புடன் வந்தாரே பார்......!

யார் தலைவி வந்தது!

அதுதாண்டி என்னவர்! அந்த மன்னவர்! வந்தவர் ஐயயோ இது என்ன என்று கைகொட்டிச் சிரித்தார். ஏன் சிரிக்கின்றுர் என்று எனைப் பார்த்தேன்......! எப்படியடி சொல்வேன்!

என்னம்மா உங்களைப்பார்த்து எதற்காகச் சிரித்தார்!

அவர் சிரித்துக்கொண்டே யிருந்தார். நான் பாய்ந்தோடி அவரிடம் இருந்த என் ஆடையைப் பிடுங்கி உடுத்திக்கொண்டுவிட்டேன். இன்று கூட அதைச் சொல்லிச் சொல்லி என்னைக் கேலி பேசுவார்!

ஆமாம் ஆடை உடுத்தித்தானே புன்னை நிழல்விட்டு வந்ததாகச் சொன்னீர்கள்!

எங்கே உடுத்தினேன். கண் விழித்ததும் ஆடையைத் தேடினேனு? என் அருகில் புன்னை மரத்தை ஊடுருவி நிலவொளி வெண்மையாக காய்ந்திருக்கிறது. நான் எழுந்த உடன் என் ஆடைதான் என எண்ணி உடுத்தி நடந்தேன்.

பிறகுதான் தெரிந்தது நான் உடுத்தியது ஆடையல்ல—அழகு நிலவென்று!

ஏண்டி தோழி!

ஆடைபோல் தோற்றம் தந்து ஏமாற்றிய அழகு நிலவதனை நோவதா?

நிலவொளிபோல் வெண்மையாய், மெல்லியதாய் ஆடைதனை நெய்தவனை நோவதா?

ஆடையை மறைத்தால் நிச்சயம் அழகு நிலவதனை உடுப்பாள் என அறிந்து ஆடையை மறைத்தானே; அவனை நோவதா?

யாரையடி நோவது! தோழி அங்கே வருவது அவர் மாதிரி இருக்கே வா போகலாம்!

அவர்கள் போனுல் என்ன! இதோ அவர்களைப் படைத்தவள் வருகிருள். பருகுங்கள் அழகை:

"கலவிக் களியின் மயக்கத்தால்
கலைபோய் அகலக், கலைமதியின்
நிலவைத் துகில்என்று எடுத்து
உடுப்பீர்!
நீர்பொன் கபாடம் திறமினோ!"

—[கலிங்கம்-கடைதிறப்பு: 34]


**நமது தோழர்களுக்கு நல்லதோர் செய்தி!**

- அடிமைச் சிறையிலிருந்து விடுபட
- ஆணவக்காரர்களின் கொட்டம் பொடிபட
- விடுதலைக் கொடியேந்தி
- வெற்றிமுகம் காட்டி
- வீரநடை போட்டு

பட்டிதொட்டி எங்கும் பவனிவர இருக்கிருன்

**"தலைவன்"**

தி. மு. கழக வார ஏடு ★ ஆசிரியர்: தினகரன்

விவரங்களுக்கு: 31, பார்த்தசாரதிப் பேட்டைத் தெரு, சென்னை-6.



# விடுதலை வீரர்

—[க. இராசன்]—

அடிமைப்பட்ட நாடு ஒன்று விடுதலை பெற்று நல்வாழ்வினைக் காணவேண்டுமானால் எத்துணைக் கட்ட நட்டங்களை, எத்துணைத் துன்பந் தொல்லைகளைத் துய்த்துத் தீரவேண்டும் என்பதற்கு மேற்கோள்கள் வரலாற்றில் பரக்கக் காணலாம். ஒரு நாட்டில் கொடுங் கோலாட்சியை மாய்த்து நல்லாட்சி நிலவுதற்காகச் செய்கின்ற போர்—நடத்தப்படுகின்ற போராட்டம் வேறு; ஒரு நாட்டில் பிற நாட்டான் ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டாரின் துணையோடு வந்து புகுந்து கொண்டு, தன்னுடைய வல்லாட்சியை ஊன்றிக் கொண்டுவிட்ட போது நடத்தப்படுகின்ற போர் வேறு. பிரெஞ்சு நாட்டில் பாஸ்டிலி சிறை உடைக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு முன்னர் அந்த நாட்டு மக்கள் கொடுங்கோலாட்சி வயப்பட்டுப் பட்ட துன்பங்கள் சொல்லுதற்கரிய கோரத் தன்மையுடையன. பட்ட துயரங்கள் விளம்பவொண்ணுக் கொடுமை நிறைந்தன.

இழந்த இழப்புக்கள் உயிராக எண்ணற்றவை, உடைமைகளாக சொல்லுந் தரத்துக்கு அப்பாற் பட்டவை, உடல் உறுப்புக்களாகவும் அவ்வாறே! இது கொடுங் கோன்மையை எதிர்த்து, — மிகச் சிலர் வாழ்வதற்காக மிக மிகப் பெரும்பான்மையரான நாட்டு மக்களுக்குப் பல்வேறு வகைப்பட்ட துன்பங்களையும், தொல்லைகளையும் விளைத்த விலங்கு ஆற்றலும், இயந்திர வலியும் ஒருங்கே பெற்ற ஒரு கொடிய வல்லாட்சியை எதிர்த்து அந்த நாட்டு மக்களே நடத்திய உள்நாட்டுப் போராகும்.

எவ்வாறேனும் ஆளுகையில் வீற்றிருக்கவேண்டுமென்றபோதையும், மக்களின் உரிமையைப் பறித்து, நலத்தைப் பறித்து, வளத்தைப் பறித்து, நல்வாழ்வினைச் சூறையாடி, மமதையாட்சிபுரிய வேண்டுமென்று பெரு வெறியும் கொண்டுவிட்டோர், அந்த வெறியின் முன்னிலையாக, அந்தப் போதையின் காரணமாக எப்படி எப்படியெல்லாம் விலங்கென, இயந்திரமென உள்ளத்தை இழந்து, உணர்வை இழந்து செயற்படுவர் என்பதற்கு அன்றைய பிரெஞ்சு நாட்டு நிகழ்ச்சிகள் சிறந்த எடுத்துக்காட்டாக எதிர் நிற்கின்றன. அங்கே அடித்தோரும்அடிக்கப்பட்டோரும் சொந்தச் சகோதரர்கள்தாம். அங்கேகொடுமைப்படுத்தியோரும், கொடுமைக்காளானோரும் உடன்பிறந்தார்கள்தாம். அங்கே மாய்த்தோரும், மாய்க்கப்பட்டோரும் ஒரு தாய் வயிற்றுச் சேய்கள் தாம். இது உள்நாட்டுப் போர். ஒரு நாட்டு மக்கள் கொடுங்கோன்மை நிறைந்த வல்லாட்சியை எதிர்த்து நல்லாட்சியைக் காண்பதற்கென நிகழ்த்திய போர்.

ஒரு நாட்டு மக்களே தங்கள் நாட்டில் நல்லாட்சி நிலவவேண்டும் என்பதற்காக நடத்தியபோரில் சொல்லுதற்கரிய பெரும் பெரும் கொடுமைக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாக வேண்டும் நிலை வந்துற்றது என்றால், ஒரு நாட்டில் பிறநாட்டான் ஒருவன் ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோரின் துணைகொண்டு தன்னுடைய கொடிய, அந்நிய ஆட்சியை நிறுவிக்கொண்டுவிட்ட பிறகு உரிமை இழந்த அந்த நாட்டு மக்கள்—அந்த நாட்டுரிமை என்ற ஒன்றை இழந்ததன் முன்னிலையாக வாழ்விழந்து, வளமிழந்து, நலமிழந்து, மானமிழந்து விலங்கென உலவிக்கொண்டு, உழன்று கொண்டு கிடக்கும் நிலையில்-அந்த வல்லாட்சியை, மமதையாட்சியை அந்நிய ஆட்சியைத் துரத்திக் காணவேண்டியவர்கள் எத்துணை மனவுறுதி கொண்டோராய் இருக்க வேண்டும்! எத்துணைத் துணிச்சல் மிக்கோராய் இருக்கவேண்டும்! எவ்வளவு பெரிய அடக்குமுறையினைத் தாங்கிக்கொள்ளச் சித்தம் கொண்டோர்களாக இருக்கவேண்டும்! எத்துணை சொல்வதற்கும் நடுக்கமெடுக்கும் சித்திரவைகளைஏற்றுக்கொள்ள உளமுவந்து முன்வரவேண்டும்! அதற்கும் வரலாற்றில் சில நிகழ்ச்சிகள் உள்ளன. அதற்கு அண்மைக் கால நிகழ்ச்சிகளாக நம் கண்முன் நிற்பவை அல்ஜீரிய நிகழ்ச்சிகள் தாம்!

அப்பப்ப, தங்கள் நாட்டில் வந்து ஆளுகை என்ற பெயரில் அடக்குமுறை நடத்திக்கொண்டிருந்த பிரெஞ்சு வல்லாட்சியை எதிர்த்துக், கொடுமனம் படைத்த கயவர்களை எதிர்த்து அல்ஜீரிய மக்கள் நடத்திய போர் எத்துணை உறுதிவாய்ந்த போர்! ஐயோ, அந்த நாட்டு மக்கள் தங்கள் நாட்டு விடுதலைக்காகப் பட்ட கொடுமைகள், பட்ட இன்னல்கள் அடைந்த அவமானங்கள் — சும்மா அவமானங்கள் என்று சொல்லிவிட்டால் போதுமா அவற்றை! — விவரிக்கவொண்ணுதவை! இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட வீடுகள், கொள்ளையடிக்கப் பட்ட வீடுகள் எத்தனை எத்தனை! மானம் சூறையாடப்பட்ட பெண்டிர் எத்துணை பேர்! எத்துணைத் துடிப்புள்ள இளைஞர்களின் உயிர்கள், அறிவும் ஆற்றலும் நிறைந்தோரின் உயிர்கள் பறிக்கப்பட்டன!

இத்துணை அடக்குமுறைகளையும் ஏவிவிட்டு இழப்புக்களை உண்டாக்கியோர் யார்?

ஒருகாலத்தில் கொடுங்கோன்மையை எதிர்த்து, அடக்குமுறையை எதிர்த்துப் பெரும் போர் புரிந்த பிரெஞ்சுக்காரர்கள்தாம்!

இங்கே பாராட்டவேண்டுவன, அடிமைப்பட்ட நாட்டினர் பாடமாக எடுத்துக்கொள்ளுதற்கு இன்றியமையாதன, கொடிய அடக்குமுறையைக் கண்டு, சித்திரவதையைக் கண்டு, உயிர் பறிக்கும் செயலைக் கண்டு, மானம் பறிக்கும் கோரத்தைக் கண்டு நிலை பிறழாது,

உளங் கலங்காது நின்ற அல்ஜீரியா வின் நாட்டுப் பற்று நிறைந்து வீரர் களின் மனவலியும், துணிச்சலும் தான்! அன்னூர் கொண்ட கொள் கையில் பெற்றிருந்த மாற்றமுடி யாத பற்றுதலும், பிடிப்புந்தான்! எடுத்த குறிக்கோளை எய்தியே தீரு வோம் என்ற அசைக்கமுடியாத ஊக்கமும், உறுதியும்தான்!

அல்ஜீரியாவின் விடுதலைக்கு அவ் வகை, அத்தகை ஊக்கமும், உறுதி யும் கொண்ட சொந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடிய வீரருள் வீரன் சிறப்பு வாய்ந்த தலைவன் பென் பெல்லா என்பான்!

மலைகுலைந்தாலும், நிலை குலையாத, நிலை கலங்காத மாவீரன் பென் பெல்லா! அந்த வீரனின் செயல் திறன், அந்த வீரனின் உள்ள உறுதி, அந்த வீரனின் நாட்டுப் பற்று, எந்த நாட்டு இளைஞர் கூட் டத்துக்கும்,உரிமைஉணர்வுகொண் டோர் அனைவருக்கும் நல்லதொரு மேற்கோள்; சிறந்ததொரு எடுத் துக்காட்டு.

உரிமை இழந்த நாடு உலகத்தின் எந்தப் பாங்கில் இருப்பதொன்ரு னுலும், அந்த நாட்டின் விடுதலை விரும்பும் வீர கோட்டத்தவர் பென் பெல்லாவின் வரலாற்றை ஓரளவு தெரிந்துகொள்ளுதல் இன்றை யமையாதது. "ஆக்கம் அதர் வினுய்ச் செல்லுமே அசைவிலா ஊக்கம் உடையான் உழை" என்ற வள்ளுவப்பெருந்தகையின் வாக்குக் கொப்ப அசைவிலாத ஊக்கத்தோடு இடைவிடாது முயன்று, போராடி உலகின் ஒரு சிறு பாங்கின்—அல்ஜீ ரியாவின் வீர வரலாற்றைச் சமைத்த ஆயிரக் கணக்கான பெரு வீரர் களின் பங்கில் மிகப்பெரும் பங்கு பென் பெல்லாவிற்கே உரித்தாகும்.

பென் பெல்லா வீரமும், தீரமும் செறிந்த உலகத் தியாகப் பரம்பரை யில் ஒருவன். அல்ஜீரிய நாட்டு அனைத்து மக்களின் பார்வையிலும் பென்பெல்லா ஒரு தியாக வீரனுகவே காட்சியளித்துக் கொண்டு நிற் கிருன். இன்று அல்ஜீரியாவில் உள்ள மாற்றுக் கருத்துள்ள மற்றத் தலைவர்கள் எல்லாம் பென்பெல்லா வின் தலைமையை ஏற்றுக்கொண் டதே அதனை வலியுறுத்திக் காட்டு கின்றது.

பென்பெல்லா சென்ற இரண்டா வது உலகப் பெரும் போர்க் காலத் தில் பிரெஞ்சுப் படையிற் சேர்ந் தான்—கமிசன் பெருத இராணுவ அதிகாரியாக. அன்றுதொட்டு இன்று வரை கடந்த இருபத்திரண்டு ஆண்டுக் காலத்திலும் ஆர்ப்பாட் டப் போர்ப்பாட்டைத் தவிர, பென்பெல்லா அறிந்தது வேறெதை யுமில்லை. ஆமாம், தன் இளமைக் காலம் முழுதையும் போர், போர், போர் என்று போர்ப்பரணியிலேயே கழித்தவன் பென் பெல்லா.

பென்பெல்லா நினைத்திருந்தால், விரும்பியிருந்தால் இன்று பிரெஞ்சு நாட்டிலேயே பேரதிகாரம் கொண்ட தோர் இராணுவத் தலைவனுக மாறி யிருக்கலாம். தன்னை அதிகாரத் தின் உச்சிக் கொம்பில் இருத்திக் கொண்டிருக்கலாம்! தன் குடும்பத் தையும், சுற்றத்தையும் செல்வ வளம் மிக்கதாக மாற்றியிருக்கலாம். தனக்கு வேண்டியோர்க்கெல்லாம்—தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி உயர் அலுவல் நல்கியிருக்கலாம். ஆனுல்,

பென்பெல்லா தன்னைப்பற்றி எண்ண மறந்தான். தான் நல் வாழ் வும், உயர் வாழ்வும் இன்ப வாழ்வும் வாழவேண்டுமென்ற நினைப்பி லிருந்தே விடுபட்டு நின்ருன். தன் குடும்பம் என்று அவன் எண்ணிய போது அல்ஜீரிய நாட்டு மக்கள் அனைவருமே, அல்ஜீரிய நாடு முழு வதுமே தன் குடும்பமென அவன் உளங்கொண்டான். அவ்வாறு எண்ணுவதைத் தவிர வேறு வகை யில் எண்ணுவதற்கே அவனுல் இயலவில்லை. எனவே,

பென்பெல்லா மாற்ருனின் பெரிய மாளிகையில் மணியம் செய்வோன் எனப் பெயரேற்று அடிமையர்கித் தொழும்பு செய்வதினும் தன் னுடைய சிறு குடிசிலுக்குத் தானே தலைவன் எனும் நிலையினை எய்தப் பெறுவதே பெரும்பேருக எண்ணி னுன். அவ்வழி செயல்பட்டான்.

பென்பெல்லாவின் பிறப்பு 1919. மொரோக்கோவின் எல்லைப்புறத் துக்கருகில் மார்னியா எனும் ஊரில் ஏழைக் குடியானவர் குடியிற் பிறந்த ஏழை மகன் பென்பெல்லா. அல் ஜீரிய தேசிய இயக்கத்தின் முதல் தலைவரான மசாலி ஆஜ் என்பாரின் கூட்டுறவு பென்பெல்லாவிற்குக் கிட்டிற்று. அந்தக் கூட்டுறவு பென்பெல்லாவின் உள்ளத்தில் நாட்டுப்பற்றை ஏற்றிற்று.

பென்பெல்லா நாளடைவில் அல் ஜீரிய விடுதலை இயக்கத் தலைவர் களிற் பெருமை வாய்ந்தவனுனன். பிரெஞ்சு ஆட்சியினை அல்ஜீரிய மண்ணிலிருந்து துரத்தியடிக்க வேண்டும் என்பதற்காக நிறுவப் பெற்ற ஓ. எஸ். என்னும் சிறப்பு நிறுவனம் அவன் கண்டதாகும்.

முதலில் அந்த ஓ. எஸ். நிறு வனம் அல்ஜீரியாவிற் பதவி வகிக் கும் பிரெஞ்சுக்காரர்களைத் தாக்கு வதையே வேலைத் திட்டமாகக் கொண்டு இயங்கியது- ஓரான் நக ரத்து அஞ்சலகத்தைத் தாக்கிக் கொள்ளையடிக்கும் முக மூடிக் கூட் டத்து ஏற்பாட்டை பென்பெல்லா தானே முன் நின்று செய்தான். அந்தத் தாக்குதலில 40 இலட்சம் பிராங்குகளை அவர்கள் கைப்பற்றி னர். அந்தத் தாக்குதலின் விளை வாகப் பென்பெல்லா 1950ல் வெஞ் சிறைக்குள் தள்ளப்பட்டான். எனி னும், எவ்வாருே கடத்திக்கொண்டு வரப்பட்டிருந்த அரம் ஒன்றைக் கொண்டு சிறைக் கம்பிகளை அராவி அகற்றிச் சிறையிலிருந்து தப்பி வெளியேறினுன் பென்பெல்லா. அப் போது கிதர் எனுப் பெயரினர் முத லான அவனுடைய கூட்டாளித் தலைவர்கள் கொய்ரோவிலிருந்தனர். அவர்களோடு வந்து அவனும் சேர்ந்துகொண்டான்.

பென் பெல்லா தன்னுடைய கூட்டாளிகளான கிதர், பென்கேதா மீர்காசிம், கரீம் முதலான ஒன்பதின் மரோடு சேர்ந்து, வெளிப்படையான புரட்சி நோக்கங்கொண்ட, தாக்கும் குறிக்கோளையுடைய எப். எல். என் எனும் இயக்கத்தை 1954 நவம்பரில் தொடங்கினுன்.

பென்பெல்லாவைத் திரும்பவும் 1956 அக்டோபரில் பிரெஞ்சுக்காரர் சிறைபிடித்துக் கொண்டுவிட்டனர். நாபாட் என்னுமிடத்திலிருந்து மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த டுனிஸ்எனுமிடத்திற்குமொரோக்கோ நாட்டு மன்னனின் அழைப் பின்மீது, அவர்தம் விருந்தினனுக வானூர்தி மூலம் பயணம் செய்து கொண்டிருந்தான் பென் பெல்லா. அப்போது பிரெஞ்சு ஆட்சியினர் பென் பெல்லா பயணம் செய்து வந்த வானூர்தியைஇயக்கிக்கொண் டிருந்த பிரெஞ்சுக்காரரிடம் உத்தரவு போட்டதன் மூலம், அந்த வானூர் தியை அல்ஜீரிய மண்ணில் இறக் கும்படி செய்துவிட்டனர். பிரெஞ்சுக் காவலர் பென் பெல்லாவைச் சூழ்ந்துகொண்டு விட்டனர். அட் லாண்டிக் கரையிலுள்ள ஆயிக்ஸ் என்னும் தீவுக் கோட்டையில் பென் பெல்லா சிறை வைக்கப்பட்டான்.

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15
இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

பென் பெல்லாவைத் தீவுக் கோட்டையிற் சிறை வைத்த பின்னர் அல்ஜீரியாவில் ஆளுகைக் கொலு விருந்த ஆதிக்க வெறியினர் அடக்கு முறையினைக் கண் மண் தெரியாமற் கட்டவிழ்த்துவிட்டனர். மிகமிக மோசமான முறையிலே நடந்துகாட்டினர். அவை வெளி நாட்டினர் உள்ளத்தில் வெறுப் பினைப் பெருக்கின. அல்ஜீரியாவிலோ கனன்று கொண்டிருந்த விடுதலைத் தீயினை அவை மேலும், மேலும் பற்றியெரியச் செய்தன. எல்லாமாகச் சேர்ந்து பென் பெல்லாவை விடுதலை செய் எனும் ஒலி முழக்கமாக உருப்பெற்றன. அந்த ஒலி முழக்கமே அல்ஜீரியாவின் விடுதலைக்கென சீறிப் பாயும் புலியெனத் துடித்துக்கொண்டு நின்ற விடுதலை வீரர்களின் போர்ப்பரணியாக மாறிற்று.

பென் பெல்லாவைத் தீவுச் சிறையிலிருந்து — யார், என்ன வெறுப்பைத் தெரிவித்தும்-பிரெஞ்சுக்காரர் அகற்றாமலே வைத்திருந்தனர். எவியன் உடன்படிக்கை ஏற்பட்டச் சமயம்தான் பிரெஞ்சு நாட்டுப் பெருநிலச் சிறையினுக்குப் பென்பெல்லா அகற்றப்பட்டான். அந்தப் பிரெஞ்சுச் சிறையின் நிலைமைகள் மிகமிகக் கேவலமாக — மிகமிகக் கொடுந் தன்மை பெற்றனவாக இருந்தன. அந்தக் கேவல நிலைமையை, கொடிய தன்மையை எதிர்த்து பென்பெல்லா தன்னோடிருந்த நூற்றுக்கணக்கான விடுதலை வீரர்களோடு சேர்ந்துகொண்டு உண்ணாநோன்பு தொடங்கினான். அந்த உண்ணாநோன்பு இரண்டு வாரங்கள் தொடர்ந்து நடந்தது.

பென்பெல்லா சிறையிலிருந்த போதுகூட ஒரே உறுதியாகத்தான் இருந்தான். விடுதலை பெற்றபிறகு, பிரெஞ்சுக்காரரை அல்ஜீரியாவிலிருந்து துரத்தியடித்துவிட்ட பிறகு, அந்த நாட்டவரோடு எந்தவித மானத் தொடர்பும்கொள்ளக் கூடாது என்பதே அவன் நோக்கம். எனவே, எவியன் உடன்படிக்கையென்று இறங்கிவந்து பிரெஞ்சுக்காரர்கள் காட்டிய அறிகுறியில் ஏதேனும் உள்நோக்கமிருக்குமா என்றுகூடப் பலர் அவ்வேளை ஐயப்பாட்டுக்குள்ளாயினர். அதன்காரணமாக பென்பெல்லாவின் விடுதலையே அந்தப் பேச்சுவார்த்தையில் அல்ஜீரியரின் சார்பில் கலந்துகொண்டோரின் முதல் நோக்கமாக இருந்தது. எனினும் போர் நிறுத்தம் உறுதிப்பட்டதன்மீது இவ்வாண்டு மார்ச்சுத் திங்களில்தான் விடுதலை செய்யப்பட்டான் பென்பெல்லா.

பென்பெல்லா ஒரு தேசிய வீரன், ஒரு தேசியத் தலைவன். 1954-ல் ஏதோ ஒரு மூலைக்கொருவராகக் கலந்து கொண்டிருந்த விடுதலை வீரர்கள் 500-பேரையே வைத்துக் கொண்டு துவங்கப்பட்ட விடுதலை இயக்கம் பெரியதொரு பட்டாளத்தினும் பெருமைவாய்ந்ததாக மாற்றப்பட்டபெருமை பென்பெல்லாவையே சாரும். 50-ஆயிரம் படைவீரர்களைக் கொண்டதாக மாறியது பென்பெல்லாவின் அந்தப்படை. தேவையான ஆயுத சாதனங்கள் அனைத்தையும் பெற்றது அந்தப்படை. எல்லைப்புறமெங்கும் காவல்காத்து நிற்கும் வலிமையினைக்கண்டுவிட்டது அந்தப்படை.

பென்பெல்லா தன்னுடைய நாட்டை பிரெஞ்சு ஆதிக்கக்காரர்களோடு எவ்விதத் தொடர்பும் இல்லாததாக வைத்திருக்கவே விழைகிறான். அதற்கென அவன் திட்டமும் வகுத்து வைத்துக்கொண்டுள்ளான். அந்தத் திட்டத்திற்கு ஊறு விளைக்கும் ஒருவனாக ராமடேன் என்னும் அவன் உடனிருந்த கூட்டாளி ஒருவனே உள்ளான் எனினும் பென்பெல்லாவின் கையே ஓங்கியிருக்கிறது. மொரோக்கோ மன்னரும், கர்னல் நாசரும் பென்பெல்லாவிற்கு வெவ்வேறு வகைப்பட்ட உதவியும், உள்ளத் தூண்டுதலும் இடையறாது நல்கிக்கொண்டு வருகின்றனர். பென்பெல்லா உண்மையில் நாசரைத் தன் வழிகாட்டியாகவே எண்ணுகிறான்.

பென்பெல்லா ஒரு சமதர்மச் சமுதாயவாதி. உள் நாட்டில் பெருநிலக் கிழார்களை ஒழிப்பதும், சாமானிய மக்களின் நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு செயல் புரிவதுமே அவன் குறிக்கோள்.

பென்பெல்லா பார்வைக்குக் கவர்ச்சிகரமான தோற்றமுடையோன் அல்லன். எனினும், உள்ள வளம் மிகப் பெற்றவன். உருக்கையும் வென்று காணும் திண்மை கொண்ட மனத்தினன்.

அடிமைச் சிறையில் கிடந்துழலும் எந்த நாடாயினும், அந்த நாடு விடுதலைபெற்று நல்வாழ்வு காண வேண்டுமானால், அந்த நாட்டின் உண்மை வீரர்களும், விடுதலைவாதிகளும் பென்பெல்லாவின் உள்ள உரத்தைத் தெள்ளெனத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்! அவனுடைய தன்னலத் துறவைப் போற்ற வேண்டும். தன்னுடைய நாடே தன் பெரிய குடும்பம் என்ற பெருநோக்கைப் பின்பற்ற வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு காகிதத்தில் அடக்குமுறைக்களானவர்களே, பிறிதொருகாலத்தில், ஆதிக்க வெறி காரணமாக மற்றவர்கள்மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவர் என்ற உண்மையையும் விடுதலைவீரர்கள் உணர்ந்துகொள்ள இந்தப் பிரெஞ்சு அல்ஜீரிய நிகழ்ச்சிகள் உதவுகின்றன. விடுதலை வேண்டுவோர், அடிமைச் சிறுமதியில்லாத மனத்திண்மையினர் எந்த வித அடக்குமுறையையும் ஏற்றுக் கொள்ளும் மனவளம் பெற்றோராக, அதேவேளை வீரத்தைச் சிறிதளவும் விட்டுக்கொடுக்கும் உள்ளத் தளர்ச்சி இல்லாதோராக இயங்க வேண்டும் என்பதையும் இவை சுட்டிக்காட்டுகின்றன. வாழ்க விடுதலை வீரர்!

★

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) கி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.